# LAABH SAMACHAR

Volume: 08 | Issue : 09 | December 2019 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE





Individual Villas at **Madurai** for
## 24 Lakhs*

* DTCP Approved 140 Villas Layout
* Located at Airport -Thirumangalam Ring Road
* 24 Hours Security
* Suitable for Retirement Homes
* Solar Powered Villas
* Drinking Water Connection
* 40' and 30' Roads
* 3 Times Food Served at Home^
* Temple at Site

Call 90808 38798

Registration and Service Connection Charges Extra

Energy Livingscapes
Value . Fortune . Pride

**HEAD OFFICE :**
Plot No 264, LIG Colony,
Off Lake View Road , KK Nagar ,
Madurai - 625 020
Contact : 81108 11180
Email: info@energyls.in


SCC Program




**YOUR BRAND YOUR SUCCESS**

***Speech by:***

**Mr. D. Dhanapal,** ***Branch Head, The Times of India, Madurai & Trichy.***

Participants

In this Issue




**To**




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
செளபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

# செளபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

**18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,**
**மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536**



METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்



# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.



PH : 23322364, 2331297, 4382343

TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

## Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems



Borewell Submersibles



Single Phase Jet Pumps



Pressure Boosting Systems



Electric Motors



Single Phase Domestic Pumps



Agricultural Monoblocks



Open-well Submersibles

J.M. Karthic Kumar
Cell: 99428 23335
99769 37016

LC LASER CARE

Printer Service
Toner Refill

# TONER REFILL




1, Panthadi 1st street, 2nd floor,
(Near Thirumalai Naicker Mahal), Madurai-625 001.
E-mail: printerkarthic@gmail.com

## AQUA DIAMOND RO

Sales & Service

*All Company RO Water Purifier Service and exchange available*

*Thirukonda M. Vishnukumar*
9524273727, 9524273728
Office @ Vandiyur, Madurai
email: vishnuaqua2737@gmail.com



## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| A.T. Baskar | Member | 94429 37409 |
| **PRO** | | |
| P.M. Murali | Chairman | 94434 68476 |
| S.K.B. Chandraprakash | Secretary | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

[illegible]

## நமஸ்கார்...

மதுரையில், தேசிய மருந்து கல்வி மற்றும் ஆராய்ச்சி (நைபர்) நிறுவனத்தை அமைக்க கடந்த 2011ம் ஆண்டில் மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மதுரையைத் தவிர, அகமதாபாத், ஹாஜிபூர், கொல்கத்தா, மொகாலி, லக்னோ ஆகிய இடங்களில் கல்வி நிறுவனம் அமைக்கப்பட்டு கடந்த பல ஆண்டுகளாக முழு வீச்சில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் மதுரையில் இக்கல்வி நிறுவனத்தை அமைப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டும், மேற்படி பணிகள் எதுவும் நடைபெறாமல் இன்று வரை கிடப்பில் உள்ளது. மதுரை தோப்பூர்-ல் எய்ம்ஸ் மருத்துவமனை அமையும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிற இந்த நேரத்தில் மத்திய அரசு மேலும் தாமதிக்காமல், இந்த தேசிய மருந்து கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை அமைக்கும் பணியையும் துரிதமாக மேற்கொண்டால் நிச்சயமாக மதுரை நகர் ஒரு மருத்துவத்துறை முனையமாக மாறும். மாணவர்களுக்கு புதிய கல்விக்கான வாய்ப்புகளும் கிடைக்கும். மருந்தியல் தொழில் துறை மதுரையில் உருவாக வாய்ப்பாக இருக்கும். மத்திய அரசு இதற்கான நடவடிக்கையை விரைந்து செயல்படுத்த ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் கேட்டுக்கொள்கிறது. இதற்கு நமது சேம்பர் மத்திய மாநில அரசுகளுக்கு கடிதமும் அனுப்பியுள்ளது. நிச்சயம் இதற்கான பணிகள் விரைவில் துவங்கும் என்றும் நம்புகிறோம்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அதன்படி, தொழில் வளம் பெருக வேண்டும். மக்கள் வாழ்வாதாரம் உயர வேண்டும். அப்துல் கலாம் அவர்கள் கனவு கண்ட "2020-ல் இந்தியா வல்லரசு" ஆக வேண்டும் என்ற கனவு நிறைவேற வேண்டும் எனக்கூறி சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் **இனிய தைத்திருநாள் நல்வாழ்த்து**க்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

– குமரன் B ஜகுவா

## திருக்குறள்

**ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து**
**போற்றார்கண் போற்றிச் செயின்**

ஸௌராஷ்ட்ர மொழியில்: ப³லுன்வ்ஹீன் ப³லுன்ஹொறாய் திக³ளுஜனி லெக்த
பால்னான்ஜோள் பாவி கரெத்.

**பொருள்:** (பாதுகாப்புள்ள இடத்தின் சிறப்பால் ஆற்றலும் அதிகப்படும்). காரியத்தைக் கெடுத்துவிடக்கூடிய பகைவர்கள் வர முடியாத பாதுகாப்புள்ள இடத்தைத் தெரிந்து அதிலிருந்து கொண்டு காரியத்தைச் செய்தால் திறமையில்லாதவர்களும் திறமையுடன் வெற்றியடைவார்கள்.

*அதிகாரம் 50* — *இடன் அறிதல்* — *அரசியல்*

(காரியம் செய்வதற்கு இடத்தை அறிதல்)

# பொதுச்செயலாளர் அறிக்கை

சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

21.11.2019 - சேம்பர்-ன் இரண்டாவது செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

27.11.2019 - மதுரையில் தேசிய மருந்து கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NIPER - National Institute of Pharmaceutical Education and Research) விரைவில் அமைத்திட வேண்டும் என்பதற்காக மத்திய மற்றும் மாநிலத்தின் உரிய அமைச்சர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

02.12.2019 - சேம்பர் ஆயுட்கால உறுப்பினரும், சாய் சர்வீஸஸ் உரிமையாளருமான திரு. N.R. **பாலகுமார்** அவர்களின் மகன் திருமண விழாவிற்கு சேம்பர் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து மணமக்களை வாழ்த்தினர்.

03.12.2019 - அன்று Your Brand - Your Success என்ற தலைப்பில் மாதாந்திர மாதாந்திர கூட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக திரு. D. **தனபால்,** Branch Head, The Times of India, Madurai & Trichy அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

08.12.2019 - பாராளுமன்ற உறுப்பினர் **டாக்டர். சுப்பிரமணிய சுவாமி** அவர்களின் சதாபிஷேக விழாவிற்கு சேம்பர் செயற்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். விழாவில் சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. ஐகுவா அவர்கள் முன்னிலை வகித்தார்.

09.12.2019 - சேம்பர் முதுநிலைத்தலைவர் திரு. **பாலா வெங்கட்** குட்டி அவர்களின் 25வது ஆண்டு திருமண விழாவில் சேம்பர் செயற்குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

- K.K. தினேஷ்

# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

இந்த மாத லாப் ஸமாச்சார் இதழில் நமது சமூகத்தின் பெருமைக்குரிய மனிதராக இன்று திகழும் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். S.S. **சரவணன்** அவர்களை நேர்காணல் செய்து வெளியிடப்பட்டுள்ளது. அவரது சேவையை பாராட்டி லாப் ஸமாச்சார் இதழில் வெளியிடுவதில் சேம்பர் பெருமை கொள்கிறது. அவரை நேர்காணல் செய்த சேம்பர் இணைச் செயலாளர் திரு. J.S. **சாயி ஜீவன்** அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.



சாலையில் கிடந்த ரூ. 4.47 லட்சத்தை உரிய நபரிடம் கொடுத்து அனைவரின் பாராட்டுக்களை பெற்ற நம் சமூகத்தை சேர்ந்த திரு. K.A. **பூபாலன்** அவர்களை நமது சேம்பர் இதழின் வழியாக பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறது. இவர் நமது சேம்பர் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.



**நமது சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும்** இனிய 2020 புத்தாண்டு மற்றும் **தைத்திருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.**

B.S. ஜெனார்த்தனன்

Sourashtra Chamber of Commerce
Bank Details:
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence, Business News / Information, Govt. Notifications, Amendments, New Technology etc.
**93441 97952**




LAABH SAMACHAR MULTI COLOR ADVT.

Contact: 93441 97952






# YOUR BRAND YOUR SUCCESS

நம் நிறுவனத்தை, நமது தயாரிப்பை சந்தையில் மதிப்புமிக்கதாக ஆக்கவும், விற்பனையை அதிகரிக்கவும் பிராண்டிங் அவசியம்.

பிராண்டிங் என்பது என்ன? எவ்வாறு அதன் மூலம் நம்மை உயர்த்திக்கொள்வது என்பது பற்றி அறிந்து கொள்வதற்காக **YOUR BRAND YOUR SUCCESS** என்ற தலைப்பில் கடந்த 03.12.2019 அன்று மாலை 6 மணி அளவில் சேம்பர் வளாகத்தில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக திரு. D. **தனபால்** Branch Head, The Times of India, Trichy & Madurai அவர்கள் கலந்து கொண்டு பேசினார்.

நிகழ்ச்சிக்கு சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் தலைமை தாங்கி அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினரை நிகழ்ச்சிக்குழு தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் அறிமுகம் செய்தார்.

அவர் தனது உரையில், பிராண்டிங் என்பது வணிகத்தை அடுத்த நிலைக்கு கொண்டு செல்வது. பிராண்டிங் செய்வதன் மூலம் நம் நிறுனத்தின் தரம், விற்பனை ஆகியவை உயர்கிறது. நாம் தயாரிக்கும் பொருள் அதற்கான போட்டியாளர்கள் பலர் இருந்தாலும், அப்பொருள் சந்தையில் மக்கள் அதிக அளவில் காணும்படி செய்ய வேண்டும். அளிக்கும் சேவைகள் சீராக இருக்க வேண்டும். இவை ஒரு பொருளை பிராண்டிங் ஆக மாற்றுதவற்கு வழிவகுக்கும்.

புதிய தயாரிப்பாளர் ஒருவர் தனது பொருளை சந்தையில் கொண்டு வந்து பிராண்டிங் ஆக்க விரும்புவோர் முதலில் நேரடி விற்பனையில் மக்களை சந்தித்தும், ஊடகங்களில் தயாரிப்பு பற்றிய விளம்பரங்களை தொடர்ச்சியாக அளித்து, சரியான முறையில் சேவைகளை அளிக்கும் பட்சத்தில் அத்தயாரிப்பு பிராண்டிங் ஆவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

உங்களின் தயாரிப்பு அனைத்து தரப்பு மக்களையும், அவர்களின் பொருளாதாரத்தின் அடிப்படையில் தரத்துடன் தேவையைப் பூர்த்தி செய்யும்படி இருந்தால் உங்கள் தயாரிப்பு ஒரு பிராண்டிங் தான். உங்கள் நிறுவனத்தின் முத்திரை, விற்பனை வாசகம் போன்றவைகள் மக்கள் கண்டு அது உங்களின் தயாரிப்பு என்பதை அறிந்து கொண்டால் உங்கள் தயாரிப்பு பிராண்டட் ஆகிவிட்டது என்பதை அறிந்த கொள்ளலாம்.

மேலும் பல்வேறு பிராண்டிங் குறித்த தகவல்களை சேம்பர் அங்கத்தினர்களுக்கு வழங்கினார். அத்துடன் அங்கத்தினர்களின் சந்தேகங்களுக்கும் அழகாக பதிலளித்து தனது உரையை நிறைவு செய்தார்.

இறுதியாக சிறப்பு விருந்தினர் அவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார். சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.



வாழ்வில் வளம் பெற! வர்த்தகத்தில் வெற்றி பெற!!
SCT
24X7 TV CHANNEL IN MADURAI
SOURASHTRA CABLE TV
Sourashtra Cable TV SCT
Get it on Google Play Store
விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்
94430 34909
99424 17417
98421 91906
sctchannelmdu@gmail.com
GSTIN : 33ADWFS4457J1ZD
179 177 41 64 77

## வியாபாரத்திற்கான வருமான வரி ரிட்டன் தாக்கல் செய்யும் போது கவனிக்க வேண்டியவை

- Status என்பதை சரியாக குறிப்பிட வேண்டும். உதாரணம்: Trust, Cooperative Society, Firm
- ஒவ்வொரு தலைப்புகளிலும் அந்த தலைப்புக்குரிய வருமானம் காட்டப்பட வேண்டும்.
- Form 3CD என்பதை ஆடிட்டரும், வரி செலுத்துவோர் இருவரும் அங்கீகரிக்க வேண்டும்.
- Disallowances என்பது Computation மற்றும் Tax Audit Report இரண்டிலும் வர வேண்டும்.
- Deductions, Exemptions போன்றவற்றை சட்டத்திற்குட்பட்டு கோர வேண்டும்.
- தேய்மானம் என்பதை கட்டாயம் கோர வேண்டும்.
- DTA-வைப் பார்க்க வேண்டிய சூழ்நிலையை கவனிக்க வேண்டும்.
- Schedules என்பது P and L, Balance Sheet உடன் Match ஆக வேண்டும்.
- போன Balance Sheet-லிருந்து Carry Forward-களை சரியாக கொண்டு வர வேண்டும்.
- Brought Forward Loss என்பதை சரியாக கொண்டு வர வேண்டும்.
- MAT / AMT குறித்து கவனிக்க வேண்டும்.
- Self Assessment Tax செலுத்தியதை சரியாக குறிப்பிட வேண்டும்.
- Bank Account என்பதை Prevalidate செய்து வைத்தால் Refund என்பது சுலபமாக வரும்.
- Mobile No. / e-mail ID போன்றவற்றை சரியாக குறிப்பிட வேண்டும்.

- ஸ்ரீ அரிந்தம்



# GST

## சட்டப்பிரிவு 9(3) & 9(4) பற்றிய கருத்து

GST சட்டத்தின் பிரிவு 9(3) மற்றும் 9(4) ஆகிய பிரிவுகளின் தொடர்பாக கீழ்க்கண்ட சில விபரங்களைத் தெரிந்து கொள்வது அவசியம் என சிலர் கூறுகின்றனர். இதற்கு முன் உள்ள வரிச் சட்டங்களின் உள்ள பிரிவுகள்.

**TNGST Act 1959 - Sec. 7A** : இப்பிரிவின் சில நிபந்தனைகளின் கீழ் வரியிடப்பட்ட பதிவு பெற்ற வணிகரோ / நபரோ வரிக்குட்பட்ட பொருளை கொள்முதல் செய்தால் கொள்முதல் தொகைக்கு வரி செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தப்பட்ட வரியானது செலுத்திய வணிகர் திரும்பப் பெற / Set off) இயலாது.

**TNVAT Act 2006 - Sec. 12** : இப்பிரிவின் கீழ் சில நிபந்தனைகளின் கீழ் வரிக்குட்பட்ட பொருளை ஒரு பதிவு பெற்ற வணிகருக்குப் பதிவு பெறாத அல்லது பதிவு பெற்ற வணிகர் வரியிடப்படாமல் விற்பனை செய்தால், அவ்வாறு கொள்முதல் செய்தவர் கொள்முதல் தொகைக்கு வரி செலுத்த வேண்டும். அதே சமயத்தில் அவ்வாறு செலுத்திய வரியை, தான் செலுத்த வேண்டிய Output Tax-க்கு Setoff செய்து கொள்ளலாம்.

பிரிவு 12ன் கீழ் வரி செலுத்தி விட்டு மீண்டும் செலுத்த வேண்டிய வரிக்கு ITC ஆக எடுத்துக் கொள்வது என்பது முரண்பாடாக உள்ளது என கீழ்க்கண்ட உத்தரவுகளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

- A. R.P No. 35/2010, dated 27.09.2019 - issued by Additional Commissioner (R.P.), Chennai.
- MTSTA No. 453 / 2010, dated 17.5.2011 - Tamil Nadu Sales Tax Appellate Tribunal (AB), Madurai.

மேலும் பிரிவு 12( 1 ) ன் கீழ் வரி செலுத்தி வழங்கப்பட்ட ஆணைகள் ரத்து செய்யப்பட்டன.

இதே போன்று தான் GST சட்டத்தின் பிரிவு 9(3) மற்றும் 9(4) ஆகும். ஆதலால் தான் அரசு இன்னும் ஒரு தெளிவான முடிவு எடுக்க இயலாமல் உள்ளது என கருதப்படுகிறது. இப்பிரிவுகளில் செலுத்தப்படும் வரியானது ITC ஆக எடுத்துக் கொண்டு Output Tax-க்கு சரி செய்ய வழி இருக்கும் போது, இப்பிரிவுகளில் வரி வசூலிப்பதால் அரசுக்கு வருவாய் என்ன என்பது கேள்விக்கு உரியதாக இருக்கிறது.

பிரிவு 9(3)ன் கீழ் ஏற்கனவே சில பொருட்கள் / சேவைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் பிரிவு 9(4)ன் கீழ் Construction துறை தவிர இதுவரை பட்டியல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

- ஸ்ரீ அரிந்தம்




# டேட்டா எனும் நவீன ஆயுதம்

மனிதன் பயன்படுத்திவந்த ஆயுதங்கள் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறாக பரிணாமம் பெற்றுவந்திருக்கின்றன. கற்கள், வில், அம்பு, துப்பாக்கி, விமான தாக்குதல், ஏவுகணை, அணுகுண்டு என்ற வரிசையில் இன்றைய நவீன யுக ஆயுதமாக தகவல் எனப்படும் டேட்டா மாறியிருக்கிறது.

டேட்டாவால் ஆக்கவும் முடியும். அழிக்கவும் முடியும். பொருளாதாரம் முதல் அரசியல் வரை அனைத்து துறைகளிலும் டேட்டா எனும் ஆயுதம் அதிதீவிரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனால்தான் டேட்டா சயின்ஸ் முன்னணி படிப்பாக மாறியிருக்கிறது. டேட்டா திருடர்கள் உலகுக்கு அச்சுறுத்தலாக மாறிவருகிறார்கள். டேட்டாக்களை சேகரிக்க, மார்க்கெட்டிங் பிரமுகர்கள் முதல் தொழிலதிபர்கள் வரை, கல்லூரி பேராசிரியர்கள் முதல் சமூக உளவியலாளர்கள் வரை பயன்படுத்தி வந்த உத்தி சர்வே எடுப்பது. ஆய்வில் பங்குபெறுபவர்களிடம் கேள்விகள் கேட்டு அவர்கள் தரும் பதில்களை ஒருங்கிணைத்து ஆய்வு செய்தார்கள்.

ஆனால், இப்போது டேட்டா சேகரிக்கும் முறைகளே முற்றிலுமாக மாறிவிட்டன. மாறி வரும் உலகில் நாம் அன்றாடம் நம்மையும் அறியாமல் விட்டுச்செல்லும் டிஜிட்டல் தடயங்கள் இருக்கும்போது எதற்கு சர்வே நடத்தி கேள்வி கேட்டுக்கொண்டு என்கிறார்கள் டிஜிட்டல் துறை நிபுணர்கள். மக்கள் விட்டுச்செல்லும் டிஜிட்டல் தடயங்கள் சேகரித்து ஆய்வு செய்வது தான் இன்றைய டிரெண்ட். கூகுளில் நம் தேடல்கள் டேட்டா. இன்டர்நெட்டில் நம் க்ளிக்குகள் டேட்டா. பேசும் மொழி டேட்டா. பதிவாகும் ஒவ்வொரு வார்த்தைகளும் டேட்டா. இவ்வளவு ஏன், நாம் எடுக்கும் புகைப்படங்கள் கூட டேட்டா தான். புகைப்படங்களைக் கொண்டு மனித மணம் பற்றியும் மாறி வரும் குணங்களையும் படம் பிடித்து காட்டலாம் என்கிறார் செத் ஸ்டீஃபன்ஸ் – டேவிடோவிட்ஸ். இவர் இன்டர்நெட் டேட்டா எக்ஸ்பர்ட். தினம் இன்டர் நெட்டில் பயணிக்கும் மக்களின் டிஜிட்டல் பாதைகளைக் கண்காணிப்பவர். முக்கியமாக கூகுளில் மக்கள் தேடும் விஷயங்களை பிரித்து மேய்ந்து ஆராய்பவர்.



மனிதர்களின் ஆழ்மனதை, அதிலுள்ள எண்ணங்களை, வேறு யாரிடமும் கூறாத ரகசியங்களை அவர்களிடமிருந்தே கண்டெடுக்க முடியும் என்று கிளம்பியிருக்கிறார் மனிதர். இவர் எழுதியிருக்கும் புத்தகம் 'Everbody Lies' இன்டர்நெட் தேடல்கள் மூலம் மனித மனதை ஆய்வு செய்வது பற்றிய சுவாரசியமான புத்தகம். ஆய்வு செய்ய அளவெடுத்து செய்தது போன்ற விஷயம் புகைப்படங்கள் என்கிறார்.

ப்ரவுன் மற்றும் பர்க்லி பல்கலைக்கழக கம்ப்யூட்டர் விஞ்ஞானிகள் செய்த வித்தியாசமான ஆய்வு ஒன்றிலிருந்து தொடங்குவோம். அமெரிக்காவில் பள்ளி இறுதி நாளன்று மாணவர்கள் புகைப்படம் எடுத்து அதை ஆல்பமாக்கும் வழக்கும் உண்டு. இதை இயர்புக் என்கிறார்கள். அப்படி இன்டர்நெட்டில் போஸ்ட் செய்யப்பட்டிருந்த 949 பள்ளிக்கூட இயர்புக்குகளை சேகரித்தார்கள் ஆய்வாளர்கள். 1905 முதல் 2013ஆம் ஆண்டு வரையிலான இயர்புக்குகள். அதிலிருந்து அத்தனை முகங்களையும் காலவரிசைப்படி அடுக்கி ஆராய்ந்தனர். அவை என்ன சொன்னது? அதை எளிதாக புரிய வைக்க உங்களை ஒன்று கேட்கிறேன்.

உங்கள் வீட்டிலுள்ள பழைய புகைப்படங்களை எடுங்கள். உங்கள் தாத்தா பாட்டியின் கல்யாண போட்டோ, உங்கள் அப்பா அம்மாவின் கல்யாண போட்டோ உங்கள் பழைய போட்டோ, உங்கள் குழந்தைகளின் போட்டோ அனைத்தையும் காலவரிசைப்படி அடுக்கி வைத்து பாருங்கள். இதுவரை நீங்கள் கவனிக்க தவறிய விஷயம் ஏதேனும் பளிச்சென்று தெரியும். உங்கள் தாத்தா பாட்டி எந்த போட்டோவிலாவது சிரிக்கிறார்களா? ஒன்று உம்மென்று இருப்பார்கள். இல்லை யாரோ கத்தியை காட்டி மிரட்டுவது போல் மிரட்சியுடன் நிற்பார்கள். உங்கள் அப்பா அம்மாவும் கூட போட்டோவில் சிரிக்காமல் இருந்தாலும் அட்லீஸ்ட் மிரளாமல் இருப்பார்கள். உங்கள் காலேஜ் போட்டோவை பாருங்கள். சிரிக்க வேண்டும் என்பதற்காகவாவது கொஞ்சம் சிரித்திருப்பீர்கள். அடுத்து உங்கள் குழந்தைகள் போட்டோவை பாருங்கள். ஏதோ காமெடி படம் பார்ப்பது போல் சிரித்துக் கொண்டிருப்பார்களே. சாதாரண போட்டோ, அதில் தலைமுறைகளுக்குள் ஏன் இத்தனை வித்தியாசம்?.

போட்டோ கண்டுபிடிக்கப்பட்ட போது மக்கள் அதை ஓவியங்களுக்கு நிகராக பார்த்தார்கள். போட்டோவோடு ஒப்பிட்டுப் பார்க்க அப்பொழுது வேறெதவும் இல்லையே. போட்டோவுக்கு ஈடானது ஓவியங்கள்தானே. அக்காலத்தில் ஒருவர் நின்றோ அமர்ந்தோ ஓவியர் அவரை வரைந்து முடிக்கும் வரை ஆடாமல் அசையாமல் இருப்பார். ஓவியர் வரைந்து முடிக்கும் வரை சிரித்துக்கொண்டிருக்க முடியாது. முகத்தை அசையாமல் வைத்திருக்க உம்மென்றுதான் இருக்க முடிந்தது. போட்டோ என்ற சாமாச்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட போது அதற்கு நின்றவர்கள் ஓவியத்துக்கு நிற்பது போல் முகத்தை இறுக்கிக் கொண்டு நின்றனர். அதனாலேயே அக்கால பிளாக் அண்ட் ஒயிட் போட்டோக்களில் அனைவரும் சிரிக்காமல் சீரியஸாக நின்று போஸ்

நண்பன் எதிரியானால் நிம்மதி இருக்காது;
எதிரி நண்பனானால் நம்பிக்கை இருக்காது

கொடுத்தனர். கொடுத்தனர் என்ன கொடுத்தனர், நாமும் அப்படித்தான் நின்று போஸ் கொடுத்தோம்.

இது காலப்போக்கில் மாறத் தொடங்கியது. போட்டோ கம்பெனிகள் தங்கள் விளம்பரங்களில் பல்லைக் காட்டி சிரித்தபடி இருக்கும் மாடல்களை காண்பிக்க கொஞ்சத்துக்கு கொஞ்சம் மக்கள் போட்டோக்களில் சிரிக்கத் தொடங்கினார்கள். கோடக் போன்ற கம்பெனிகள் போட்டோக்களை மகிழ்ச்சித் தருணங்களாக மார்க்கெட்டிங் செய்தன. வாழ்வின் மகிழ்ச்சியான தருணங்களை ஞாபக பொக்கிஷங்கள் ஆக்குங்கள் என்று விளம்பரப்படுத்தின. போட்டோக்களிலுள்ள தலைமுறை இடைவெளிக்கான காரணம் இதுவே!. மார்க்கெட்டிங் என்ற ஒன்று மட்டும் இல்லாதிருந்தால் இன்று வரை நாம் அனைவரும் போட்டோக்களில் உம்மென்று சிலைகள் போல்தான் நின்றுகொண்டிருப்போம்.

உலகப் பொருளாதாரம், உள்நாட்டு வளர்ச்சி போன்ற சீரியஸான மேட்டர்களில் கூட புகைப்படங்களின் பங்களிப்பு புதைந்துகிடக்கிறது என்பது எத்தனை பேருக்குத் தெரியும். ஒரு நாட்டின் பொருளாதார நிலையை அந்நாட்டின் புகைப்படங்கள் மூலம் தெரிந்துகொள்ள முடியும் என்கிறார்கள் வெர்னான் ஹெண்டர்ஸன், ஆடம் ஸ்டொரிகார்ட், டேவிட் வீல் ஆகிய பொருளாதார நிபுணர்கள்.

உலக நாடுகள் பலவற்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவு சரியாக மதிப்பிடப்படுவதில்லை. சில நாடுகள் வெட்கமில்லாமல் பொய்யாய் அள்ளிவிடுகின்றன. அந்நாடுகளின் பொருளாதார செயல்கள் சரிவர தெரிவதில்லை. இதை ஓரளவுக்கேனும் சரியாய் மதிப்பிட இந்த நிபுணர்கள் பரிந்துரைக்கும் வழி புகைப்படங்கள். அதவும் இரவு நேரத்து புகைப்படங்கள். இரவு நேரத்தில் ஒரு நாட்டில் எந்த அளவுக்கு வெளிச்சம் இருக்கிறது என்பதை பார்த்தால் போதும், அவர்களின் பொருளாதார நிலை தெரிந்துவிடும் என்கிறார்கள்.

உலகின் ஏழ்மையான நாடுகளில் வசிப்பவர்களில் பலர் மின்சார கட்டணம் செலுத்தக்கூட முடியாமல் வாழ்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் தங்கள் பொருளாதார நிலைக்கேற்ப மின்சாரத்தை பயன்படுத்துகின்றனர். உங்கள் வீட்டு வாசலில் நீங்கள் விடிய விடிய பல்பை எரிய விட்டு தூங்குகிறீர்கள். உங்களால் அந்த கட்டணத்தை கட்ட முடியும் என்பதால், சிலர் இரவு படுக்க போகும் முன் அனைத்து விளக்குகளையும் அணைத்துவிட்டு படுக்கின்றனர், காரணம் அவர்களால் இரவு முழுவதும் தீவட்டி போல் எரிய ஆகும் செலவை கட்ட முடியாதென்பதால். ஆனால், பணக்காரர்களின் வீடுகள் முழுவதும் ஜகஜோதியாக விதவிதமான லைட்டுகளால் ஒளிரும். அவர்களுக்கு அந்த எக்ஸ்ட்ரா மின்சார கட்டணம் ஒரு பொருட்டே இல்லை என்பதால். இது வீடுகளுக்கு மட்டுமல்ல, தெருக்களுக்கும் ஏன், மொத்த நாட்டுக்கும் பொருந்தும் தானே.

ஆய்வாளர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்பது பூமியிலிருந்து பார்க்கும் உங்களுக்கு தெரியாமல் இருக்கலாம். அண்டசராசரத்திலிருந்து பார்த்தால்? அமெரிக்க சாட்டிலைட்கள் தினமும் பூமியை பதினான்கு முறை சுழன்று வருகின்றன. இவை வெறுமனே பிரதஷனம் செய்வதோடு நின்றுவிடுவதில்லை, போகும் வழியில் பூமியின் ஒவ்வொரு அங்குலத்தையும் போட்டோ எடுத்து அனுப்புகின்றன. இதில் பூமியை இரவில் எடுக்கும் போட்டோக்களும் அடங்கும். அப்படி இரவில் எடுக்கும் புகைப்படங்களில் ஒவ்வொரு நாடுகளின் மேற்பரப்பிலும் பதிவாகும் வெளிச்ச அளவைக் கொண்டு ஒவ்வொரு நாட்டின் பொருளாதார நிலையை அளவிட முடியும் என்கிறார்கள்.

சாட்டிலைட் படத்தின் ஒவ்வொரு பிக்சலும் பூமியின் ஒரு சதுர கிலோமீட்டருக்கு சற்று குறைவான இடத்தை குறிக்கும். பூமியில் அந்த இடம் பிரகாசமாக இருந்தால் போட்டோவில் பிக்சல் பிரகாசமாக இருக்கும். மொத்த உள்நாட்டு உற்பத்தி கூடி தனி நபர் வருமானம் உயரும் போது அந்நாட்டு மக்கள் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு அதிகரிக்கும். அதனால் அந்நாடு மேலிருந்து பார்க்கும் போது மற்ற நாடுகளை விட பளிச்சென்று தெரியும்!

வெளிச்ச அளவை டேட்டாவாய் பாவித்து பொருளாதார நிலைமையை கணக்கிடுவது துல்லியமாக இருக்காது தான். ஆனால் நாடுகள் அளிக்கும் பொருளாதார டேட்டாவோடு அந்நாட்டின் வெளிச்ச அளவை சேர்த்து பார்க்கும் போது இன்னமும் கூட அந்நாடுகளின் பொருளாதார நிலையை புரிந்து கொள்ளலாம் என்கிறார்கள். இது ஒரு உதாரணம் மட்டுமே.

டேட்டா ஆய்வு என்பது கடல் போன்றது. அதில் பலரும் முக்குளித்து பெரும் கோடீஸ்வரர்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். அதேசமயம், டேட்டாவை பயன்படுத்துவதில் பல சர்ச்சைகளும் உள்ளன. அந்நிய நிறுவனங்கள் உள்நாட்டு மக்களின் தகவல்களை எங்கே சேமிக்கின்றன, எவ்வாறு பயன்படுத்துகின்றன என்பதெல்லாம் பெரும் சர்ச்சையாக மாறிவருகிறது.

டிஜிட்டல் உலகில் உலாவரும் டேட்டாக்களின் நம்பத்தன்மையும் பெரும் கேள்விக்குறியாகியிருக்கிறது. ஆனால், இந்த நவீன யுகத்தில் மனிதன் கையில் எடுத்திருக்கிற மிகப்பெரும் ஆயுதம் டேட்டா என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஏனெனில், டேட்டா நிபுணர்கள் நம்மை பற்றி நாம் தெரிந்து வைத்திருப்பதை விட அதிகமாகவே தெரிந்துகொள்கிறார்கள். அதை நம் மீதே பயன்படுத்தவும் செய்கிறார்கள். நமக்குத் தெரியாமலேயே.

- தி இந்து (தமிழ்)


பதிவு எண்: 16 / 2002 ☎ 0452-2679676

**மகாத்மா முதியோர் இல்லம்**

Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்

7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.

website : www.mahathmaoldagehome.com E-mail : mmilmalarkulu@gmail.com

நிறுவனர்கள்

| M.S. சந்திரசேகர் | J.R. ரமேஷ் | B.J. மகேசுவர்லால் | T.R. குமரன் | M.R. பிரேம்குமார் |
|---|---|---|---|---|
| 98421-44555 | 97861-40570 | 93444-51607 | 94437-23337 | 93444-51605 |

# பிஎஸ்-6 தொழில்நுட்ப மாற்றத்தை நோக்கி...

பொருளாதார முன்னேற்ற இலக்கை அடைவதற்கு வர்த்தக வாகனங்களின் சக்கரங்கள் சுழல்வதே ஆதாரம். பொருளாதார வளர்ச்சி எந்த அளவுக்கு இருக்கும் என்பதை வர்த்தக வாகனங்களின் விற்பனையை வைத்தே கணித்து சொல்லும் வல்லநர்களும் உண்டு. அந்த வகையில், தற்போது அந்த துறையில் ஏற்பட்டுள்ள மந்த நிலை ஒட்டுமொத்த இந்திய பொருளாதாரத்துக்கு மட்டுமின்றி பல குடும்பங்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் காரணியாக மாறியுள்ளது.

பிஎஸ்-6 என்ஜின் தொழில்நுட்பம் குறித்த எதிர்பார்ப்பும் வர்த்தக வாகன விற்பனையில் தேக்க நிலையை ஏற்படுத்தியுள்ளதாக வாகன உற்பத்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. தென்னிந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிகளவில் வர்த்தக வாகனப் போக்குவரத்து உள்ளது. குறிப்பாக, கட்டுமானப் பணிகளில் ஈடுபடுத்தப்படும் கனரக வர்த்தக வாகனங்களின் விற்பனை மிக மோசமான நிலையில் இருப்பதாக சுட்டிக் காட்டப்படுகிறது.



**பிஎஸ்-6 தொழில்நுட்பம்:** மத்திய அரசு, 2016ம் ஆண்டில் வெளியிட்ட அறிவிப்பில், ஏப்ரல் 1, 2020 முதல் பிஎஸ் - 6 தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய தயாரிப்புகள் மட்டுமே விற்பனைக்கு வரவேண்டும் என அறிவுறுத்தியுள்ளது. அதனால், தற்போது பிஎஸ்-4 என்ஜின் தொழில்நுட்பத்தில் தயாராகி வரும் வாகனங்கள் அனைத்தும் பிஎஸ் - 5 தொழில்நுட்பத்தை தவிர்த்து நேரடியாக பிஎஸ்-6 என்ஜின் தொழில்நுட்பத்துடன் தயாராக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இது நடைமுறைக்கு வருவதற்கான காலம் 6 மாதத்துக்கும் குறைவாகவே உள்ளது. அதனால், வாடிக்கையாளர்களில் பலர் புதிய வாகனங்களை வாங்கும் திட்டத்தை ஒத்தி வைத்துள்ளனர். வாகன விற்பனை மந்த நிலைக்கு அதுவும் ஒரு முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது.

வரும் ஏப்ரல் முதல் விற்பனைக்கு வரவுள்ள பிஎஸ்-6 என்ஜின் தொழில்நுட்பத்தை தாங்கிய வாகனங்களில் அடிப்படையாகவே ஏபிஎஸ், ஏர்பேக் உள்ளிட்ட பல பாதுகாப்பு அம்சங்கள் இடம் பெற்றிருக்கும். பிஎஸ்-6 தொழில்நுட்பத்தை செயல்பாட்டுக்கு கொண்டு வருவதன் முக்கிய நோக்கமே சுற்றுச்சூழலை மாசடையச் செய்யும் நைட்ரஜன் ஆக்ஸைடின் அளவை கணிசமாக குறைப்பதுதான். இவை தவிர, அனைத்து வாகனங்களிலும் இ.ஜி.ஆர், எஸ்.சி.ஆர் போன்ற புகை வெளியேற்றும் அளவை கட்டுப்படுத்தும் கருவிகள் பிஎஸ்-6 வாகனங்களில் பொருத்தப்பட்டிருப்பது அவசியம். மேலும், ஓபிடி என்ற மின்னணு கருவியும் வாகனத்தில் கட்டாயம் இடம் பெற்றிருக்க வேண்டும். இது, இன்ஜின் சம்மந்தப்பட்ட உதிரிபாகங்களின் செயல்பாடுகளை கண்காணித்து மாசு வெளியிடும் அளவை கட்டுக்குள் வைத்திருக்க உதவும்.

**என்னென்ன மாற்றங்கள்?:** தொழில்நுட்பத்தை தாண்டி வேறு சில கவனிக்கத்தக்க மாற்றங்களும் பிஎஸ்-6 வாகனங்களில் இருக்கவே செய்கின்றன. வர்த்தக வாகனங்களில் என்ஜினைப் பொறுத்தவரை பிஎஸ் - 4 இல் எளிய ரக டீசல் என்ஜின் (சிஆர்டிஐ) மட்டுமே இருந்தது. ஆனால், பிஎஸ் - 6 ரக வாகனங்களில் சிஆர்டிஐ +விஜிடி என சற்றே சிக்கல் மிகுந்த சென்சார்களை உள்ளடக்கிய என்ஜின் பொருத்தப்படுகிறது. மேலும், டீசலுடன் ஆடப்ளூ எனப்படும் ரசாயனம் உபயோகப்படுவதும் கட்டாயமாக்கப்படவுள்ளது. இனி ஓட்டுநர்கள் சில தொழில்நுட்ப புரிதல்களையும் அறிந்து அதற்கேற்பட செயல்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

**விலை:** பிஎஸ்-6 ரக வாகனங்கள் பல அதி நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கி புதிய வடிவமைப்புடன் வரயிருப்பதால் அதன் விலையும் கூடுதலாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வர்த்தக வாகன உற்பத்தியில் ஈடுபட்டு வரும் பெரும்பாலான நிறுவனங்கள் இன்னமும் விலைப்பட்டியலை வெளியிடவில்லை. இருந்த போதிலும், பிஎஸ்-4 ஐ காட்டிலும் பிஎஸ்-6 கனரக வாகனங்களின் விலை நிச்சயம் அதிகமாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- தொழில் நேசன்


Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Fire Alarm • Audio & Video Door Phones

*Safety!* *Security!!* *Surveillance!!!*

A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

# சுங்கச்சாவடிகளில் பாஸ்ட் டேக் கார்ட்-ஐ பயன்படுத்தவது எப்படி?

நீங்கள் சுங்கச்சாவடிகளை கடக்கும் போது பல முறை பாஸ்ட் டேக் என்ற ஒரு தனியாக ஒரு லைன் இருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள் அதன் வழியாக செல்லும் வாகனம் நிற்காமல் நேராக செல்லும். அந்த வாகனங்கள் நிற்காமல் செல்வதால் அவர்களுக்கு சுங்கச்சாவடி கட்டணம் கிடையாது என்று எண்ணி விடாதீர்கள் அவர்கள் பாஸ்ட் டேக் என்ற கார்டை பயன்படுத்தி சுங்கச் சாவடி கட்டணம் செலுத்தி வருகின்றனர்.

பாஸ்ட் டேக் கார்டு என்பது ஒரு ஐ.டி கார்டு போன்றது. இதை வாங்கி நாம் காரின் கண்ணாடியில் பொருத்தி கொள்ள வேண்டும். மேலும் இந்த கார்டிற்கு நாம் தேவையான அளவிற்கு காசை முன்னரே செலுத்தி ரீ சார்ஜ் செய்து கொள்ள வேண்டும். இவ்வாறாக நாம் கார்டை ரீ சார்ஜ் செய்யப்பட்ட கார்டை காரின் கண்ணாடியில் பொருத்தினால் காரின் சுங்கச்சாவடியில் நுழையும் இடத்தில் ஒரு மிஷின் பொருத்தப்பட்டிருக்கும். அந்த மிஷின் நம் காரின் எண்ணை கண் இமைக்கும் நொடியில் கண்டறிந்து நமது வருகையை பதிவு செய்யும். பதிவு செய்யப்பட்டவுடன் நாம் முன்னரே ரீ சார்ஜ் செய்து வைத்திருந்த காசில் இருந்து அந்த சுங்கச்சாவடிக்கான பணம் கழிக்கப்பட்டுவிடும். மேலும் அந்த பகுதியை அடைத்திருக்கும் கம்பியும் தானாக திறந்து விடும். இதன் மூலம் சுங்கச்சாவடியில் பணம் செலுத்துவதற்காக வாகனங்களை வரிசைகட்டி நின்று செல்வதைத் தவிர்க்கலாம்.

**பாஸ்ட் டேக் கார்டை பெறுவது எப்படி?:** இந்த பாஸ்ட் டேக் கார்டுகள் எல்லா டோல்கேட்களிலும் கிடைக்கும். அது மட்டுமல்லாமல் பாஸ்ட் டேக் கார்டுகள் சில ஏஜென்ஸி மூலமாகவும் விற்பனை செய்யப்படுகிறது. அவர்கள் மூலமும் கார்டை வாங்கி ஆக்டிவேட் செய்து கொள்ளலாம். மேலும் ஆன்லைனிலும் இதற்காக விண்ணப்பம் உள்ளது. அதையும் பதிவிறக்கம் செய்து பயன்படுத்த முடியும்.

**ஆக்டிவேட் செய்ய தேவைப்படும் ஆவணங்கள்:**

- நீங்கள் அந்த காரை பயன்படுத்த போகும் காரின் ஆர்.சி. புக்.
- காரின் உரிமையாளரின் ஒரு பாஸ்போர்ட் சைஸ் போட்டோ.
- வாகன உரிமையாளரின் விபரங்கள் கே.ஒய்.சி., படிவமாக நிரப்பப்பட வேண்டும்.
- இருப்பிட சான்று மற்றும் அடையாள சான்றிற்காக டிரைவிங் லைசன்ஸ், ஆதார் கார்டு, பான் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை இதில் ஏதேனும் ஒன்றின் நகல்.


**பாஸ்ட் டேக் கார்டு பெறுவதால் கிடைக்கும் நன்மைகள்:** நெடுஞ்சாலைகளில் பயணம் செய்யும் போது பாஸ்டேக் கார்டு பெறுவதன் மூலம் நாம் பல நன்மைகளை பெற முடியும்.

- கையில் பணம் எடுத்து செல்ல தேவையில்லை. சுலபமாக பணத்தை செலுத்தும் வசதி.
- சுங்கச்சாவடிகளில் பணம் செலுத்த வாகனத்தை வரிசையில் நிறுத்த தேவையில்லை. ஏன் வாகனத்தை நிறுத்தவே தேவையில்லை. நாம் அந்த இடத்தை கடந்து சென்று கொண்டே இருக்கலாம்.
- பாஸ்ட் டேக் கார்டை ஆன்லைன் மூலம் கிரெடிட் - டெபிட் அல்லது நெட் பேங்கிங் ஆகிய ஆப்ஷன்களை கொண்டு பயன்படுத்தலாம்.
- சுங்கச்சாவடிகளை கடந்த பின்பு கழிக்கப்பட்ட பணம் மற்றும் மீதம் உள்ள பணம் குறித்த தகவல் எஸ்.எம்.எஸ்., மூலம் உடனடியாக அனுப்பி வைக்கப்படுகிறது.
- பாஸ்ட் டேக் வாடிக்கையாளர்களுக்கு சுங்கச்சாவடி கட்டணத்தில் 10 சதவீத தள்ளுபடி தரப்படுகிறது.

**ரீசார்ஜ் செய்வது எப்படி?:** பாஸ்ட் டேக் வாடிக்கையாளர்கள் ஒரு முறைக்கு ரூ. 100 - ரூ. 1 லட்சம் வரை ரீ சார்ஜ் செய்துகொள்ளலாம். டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு, NEFT, RTGS நெட் பேங்கிங் ஆகிய வசதிகள் மூலம் ரீ சார்ஜ் செய்யலாம்




LAABH
SAMACHAR
MULTI COLOR ADVT.
Contact: 93441 97952





அல்லது சுங்கச்சாவடிகளிலும் நேரடியாக சென்று ரீ சார்ஜ் செய்யலாம்.

பாஸ்ட் டேக் கார்டை பயன்படுத்துவத எப்படி?: இந்த கார்டை நீங்கள் காரின் முகப்பு கண்ணாடியில் பொருத்தி கொண்ட பின் நீங்கள் சுங்கச்சாவடியில் பாஸ்ட் டேக் வாடிக்கையாளர்களுக்காக உள்ள தனி பாதையில் நீங்கள் செல்லும் போது உங்கள் காரின் பாஸ்ட் டேக் கார்டு மூலம் உங்கள் வருகை உடனடியாக பதிவு செய்யப்பட்டு நீங்கள் ரீ சார்ஜ் செய்து வைத்திருந்த பணத்தில் இருந்து கழித்துக் கொள்ளப்படும்.

**பேலன்ஸ் செக் செய்வது:** பாஸ்ட் டேக் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஐ.டி., பாஸ்வேர்டை பயன்படுத்தி வெப்சைட் மூலம் அவர்களது பேலன்ஸை தெரிந்து கொள்ளலாம். மேலும் இந்த கார்டை பிளாக் செய்ய கார்டில் வழங்கப்பட்டுள்ள கஸ்டமர் கேர் எண்ணில் தொடர்பு கொண்டு கார்டை பிளாக் செய்யவும் முடியும். மேலும் கார்டு தொலைந்து விட்டால் அந்த கார்டை பிளாக் செய்து புதிய கார்டை வாங்கி கொள்ளலாம். பழைய கார்டில் இந்த பேலன்ஸ் புதிய கார்டிற்கு மாற்றப்படும்.

தற்போது பாஸ்ட் டேக் கார்டுகள் இந்தியா முழுவதும் உள்ள 240 சுங்கச்சாவடிகளில் பயன்படுத்த முடியும். மேலும் அதிக சுங்கச்சாவடிகளில் பாஸ்ட் டேக் பயன்பாட்டை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது சுங்கச்சாவடிகளில் பாஸ்ட் டேக் கார்டு கட்டாயம் இல்லை என்றாலும், வரும் காலத்தில் கட்டாயமாக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் தற்போது இருந்தே பாஸ்ட் டேக் கார்டை பயன்படுத்த துவங்குவது நல்லது.

*- tamil.drivespark.com*







ஒருவனை மனிதனாக ஆக்குபவை உதவிகளும், வசதிகளும் அல்ல
அவனுக்கு ஏற்படும் இடையூறுகளும் துன்பங்களும் ஆகும்

# சாதனை வணிகர்



திருமதி. சாந்தி

அடுத்த தலைமுறைகளை வணிகத்தில் ஊக்குவிக்கும் நம் சேம்பர், இந்த இதழில் போளியல் வணிகத்தில் வெற்றி நடைபோடும் மகால் 3வது தெருவில் அமைந்திருக்கும் புளியடிஸ் நிறுவனத்தை சாதனை வணிகராக அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சியடைகிறது. இதன் ஸ்தாபகர் திருமதி. P.R. **ரெத்தினம்.** தன் கணவர் திரு. **ரெங்காச்சாரி** வேலை பார்த்து வந்த மில் மூடியதால் தன் பெரிய குடும்பத்தை காப்பாற்ற துணிச்சலுடன் சிந்தித்தார். தன் வீட்டில் இருந்த அரிசிகளையும் பித்தளை பாத்திரத்தை ரூ. 54க்கு விற்று இட்லி வியாபாரத்தை ஆரம்பித்தார்.



மெல்ல மெல்ல வியாபாரம் சூடு பிடிக்கவே போளி மற்றும் இனிப்பு வகைகளை தயாரித்தார். தனது கணவர் திரு. **ரெங்காச்சாரி** மூலம் மதுரையில் உள்ள சினிமா தியேட்டர்களில் கொண்டுபோய் விற்றார். இவரிடம் சிலர் மொத்தமாக வாங்கி வீடு வீடாக சென்றும் விற்று வந்தனர். சினிமா தியேட்டர்கள் மூடு விழா கண்ட பிறகு போளியலின் தரத்தை உயர்த்தி வாடிக்கையாளர்களின் நன் மதிப்பைப் பெற்றார். பல்வேறு ஊர்களிலிருந்து மதுரை வந்து செல்வோர் தங்கள் ஊருக்கு போளியல்களை வாங்கிச் செல்கின்றனர். மேலும் வெளிநாடு செல்வோரும் வாங்கி செல்கின்றனர்.



தெய்வத்திரு. P.R. ரெத்தினம்

2005ல் இவர் காலமான பிறகு மருமகள் திருமதி. **சாந்தி** சுப்பிரமணியன் மேலும் சிறப்பாக நடத்தி வருகிறார். பல புதிய சுவைகளில் பருப்பு போளி, தேங்காய் போளி, ரவா போளி, முந்திரி போளிகள் விலை ரூ. 20/- லிருந்து ரூ. 100/- வரை தயாரிக்கின்றனர்.



தெய்வத்திரு. சுப்பிரமணியன்

அடுத்த தலைமுறையான திரு. P.S. **பாலாஜி** B.E., M.E., மெக்கானிகல் படித்து பெரிய நிறுவனத்தில் சில ஆண்டுகள் பணி புரிந்துவிட்டு தங்கள் குடும்பத் தொழிலை சிறப்பான முறையில் செய்து வருகிறார். நிறுவனத்தின் வணிக முத்திரை, வாடிக்கையாளர்களுக்கான தரம் மற்றும் சேவை அர்ப்பணிப்பு, ஸ்தாபகரின் திரு உருவப்படம் முதலியனவைகள் நிறுவனத்தின் நன்மதிப்பைப் பிரதிபலிக்கிறது.

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மதுரையில் பல விற்பனையகங்களை உருவாக்க முனைந்திருக்கிறார். வணிகத்தின் பரிணாம வளர்ச்சி சிறந்த நிலையை அடைய புதிய தலைமுறை முன்னெடுத்துச் செல்வதில் தான் உள்ளது என்பதை நிரூபிக்கும் வண்ணம் இன்று புளியடிஸ் நிறுவனம் முத்திரை பதித்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.



தெய்வத்திரு. ரெங்காச்சாரி

- நேர்காணல்: J.S. சாயி ஜீவன்



# நம் சட்டமன்ற உறுப்பினர்
## Dr. S.S. **சரவணன்** M.Tech., M.L.A., அவர்களுடன் ஒரு நேர்காணல்



பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரிய நம் மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. S.S. **சரவணன்** *M.L.A.*, அவர்கள் தம்முடைய பணிகளை மிகச் சிறப்பாக செய்து வருவதை பெருமையுடன் கூறுகிறார்.

மதுரையில் நிலவிய தண்ணீர் பஞ்ச காலத்தில் தொகுதி முழுவதும் சுமார் 80 ஆழ்துளை கிணறுகளை அமைத்திருக்கிறார். அரசமரம் இசை இலக்கிய சங்க கட்டிடத்தில் நடைபெற்ற வீட்டுவரி குறைப்புக் கூட்டத்தில் பங்கேற்று அரசிடம் முறையிட்டு வரி அதிகரிப்பை குறைத்தார். மதுரை வைகையில் தடுப்பணைகளைக் கட்டி நிலத்தடி நீராதாரத்தைப் பெருக்கியுள்ளார். மாரியம்மன் தெப்பகுளத்தில் நிரந்தரமாக நீர் நிரப்புவதற்கு சட்டமன்றத்தில் பேசி ஆவண செய்திருக்கிறார். அதோடு, மகால் மற்றும் பந்தடி பகுதிகளில் ஸ்மார்ட் சிட்டிக்கான பணிகளை செய்து வருகிறார்.

மொத்தம் 21 மாநகராட்சி வார்டுகளைக் கொண்ட தன்னிறைவு பெற்ற தொகுதியாக அரசால் அடையாளம் காட்டப்பட்டது என்கிறார். இந்த தொகுதியில் குறைகளாக மக்கள் சாலை வசதி, மின் விளக்கு, சாக்கடை பராமரிப்பு முதலியவைகளே உள்ளது என்கிறார். மதுரை சிமென்ட் ரோட்டில் உள்ள அலுவலகத்தில் தம்மை நேரில் சந்திக்கலாம். மக்களின் குறைகளைத் தீர்க்க தயாராக இருப்பதாகவும், மதுரையில் வாழும் அனைத்து சமுதாய மக்களையும் ஒரு சேர அரவணைத்துச் செல்வதாக கூறுகிறார்.

அரசியல் அடாவடித்தனம் சிறிதும் இல்லாத, படித்த பண்பாளர். இவரை 99424 17649 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என்கிறார். சேம்பரின் கோரிக்கையாக மதுரை மாநகராட்சி எல்லைக்குள் சேம்பர் கட்டிடம் கட்ட அரசிடமிருந்து நிலத்தை பெற தம்மால் இயன்றதை செய்வதாக உறுதியளித்திருக்கிறார்.


அரசியல் பயணத்தில் சாதனை படைக்க நம் சேம்பர் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

– நேர்காணல்: J.S. சாமி ஜீவன்






BANGKOK / PATTAYA
Rs. 41000 /-
Jan 11 | 5 Days
Bangkok, Thailand's capital, is a large city known for ornate shrines and vibrant street life. Pattaya is a city on Thailand's eastern Gulf coast known for its beaches.
DUBAI SHOPPING FESTIVAL
Rs.63500/-
Jan 16 | 6 Days
Dubai Shopping Festival is an annual month long event put together by the Dubai Festivals & Retail Establishment, which is a part of Dubai's department of tourism.
@vedhavalliholidays
SINGAPORE / MALAYSIA
Rs.64500 /-
Jan 16 | 6 Days
Malaysia–Singapore relations refers to the bilateral foreign relations between the two countries Malaysia and Singapore, after the separation of Singapore from the Federation of Malaysia in 1965.
R.B. SARAVANAN
VEDHAVALLI HOLIDAYS
Madurai & Tirunelveli
A2/1, KK.NAGAR, MAIN ROAD, Thulasi Pharmacy Near, Madurai-625020.
Call Now
+91 99430 31237
+91 91599 18447


BVK Foundation
Presents
6th ANNUAL
Sourashtrian Achievers
BVK Award
2019
August 04, 2019
Achievers
Best Business Innovator
Mr. E.R.Ashok kumar
Best Artist
Mr. K.Eswaran
Outstanding Professional
Dr. M.E.Paramasivam
Best Social Worker
Mr. P.V.Sethuraman Iyengar
Achievers
Privilege Awards
Mr. K.V.Pathy
Life Time Achievements Awards
Mrs. M.V.Janaranjani Bai
Outstanding Sourashtrian Awards - Mumbai
Mr. Mohan V.N. Muthuswamy
Outstanding Sourashtrian Awards - Bangalore
Mr. S.Niall
Outstanding Sourashtrian Awards - Delhi
Mr. K.K.Shreedhara

*Feeling Good Is Second Nature*

Lissy®

- Bra
- Panty
- Slips

*All Women Love*

Feeling Second Nature

*Manufacturer:*

**VGP APPARELS**

Saikrupa Industrial Estate (Dinbandu)
Shop No: 10, Near Shivam Wafers, Opp. P.L. Lokhande Marg,
Chembur(W), Mumbai - 400 089
Ph: 022 - 2525234, Cell: 89760 10072

**ஜெய்கங்கா அப்பேரல்ஸ்**
279, கீழ மாசி வீதி
விளக்குத்தூண் அருகில்
மதுரை – 1
செல்: 94430 21910

**P.G. India**
50, தெற்கு மாசி வீதி
லலிதா ஜுவல்லரில் எதிரில்
மதுரை – 1
செல்: 84382 71065

**வெங்கடேஸ்வரா டெக்ஸ் & கிட்ஸ் வியர்**
32, மஹால் 5வது தெரு
மதுரை – 1
செல்: 99650 40168

# இளைஞர்கள் சுயதொழிலில் ஈடுபட ஊக்குவிக்கும்...

## Prime Minister's Employment Generation Programme (PMEGP)

PMEGP

Prime Minister's Employment Generation Programme

இன்றைய இளைஞர்கள் படிக்கும்போதே ஒயிட் காலர் ஜாப் கிடைக்கும். நாம் என்றும் ஜாலியாக இருக்கலாம் என கனவுலகில் இருப்பார்கள். அத்தகைய கனவு ஒரு சிலருக்கு மட்டுமே நிஜமாக நிகழும். மற்றவர்களின் நிலை வெளியே சொல்ல முடியாத அளவுக்கு மன நிம்மதியற்ற நிலை. வேதனை மிக்க வாழ்க்கையாக அமைந்துவிடுகிறது. பல்வேறு சிரமங்களுக்கு இடையே படிப்பை நிறைவு செய்த லட்சக்கணக்கான இளைஞர்களும், இளம்பெண்களும் வேலை வாய்ப்புகளுக்காக காத்திருக்கும் நிலையுள்ளது. அவர்கள் எல்லோருக்கும் அரசு வேலை வழங்க இயலாது.

அதே நேரத்தில் போட்டி நிறைந்த இந்த உலகில் தனியார் நிறுவனங்களும் திறமை வாய்ந்த இளைஞர்களையும், பெண்களையும் மட்டுமே பணியில் அமர்த்தும் நிலையும் உள்ளது. இத்தகைய சூழலில் நடுத்தர, ஏழை குடும்பங்களைச் சேர்ந்த பல இளைஞர்கள் படித்த படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்காமல் தவிக்கும் நிலையுள்ளது. இத்தகைய சூழலில் 'நம் வாழ்வு நம் கையில்' என்ற ரீதியில் சுயதொழில் முனைவோராக இன்றைய இளைஞர்கள் களம் இறங்க தேவையான உதவிகள் பலவற்றை மத்திய, மாநில அரசுகள் செய்து வருகின்றன.

படித்துவிட்டு வேலை வாய்ப்பை தேடி வரும் இளைஞர்களுக்கு அரசின் மாவட்டத் தொழில் மையம் சார்பில் வங்கிகள் மூலம் பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புக் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்பு கடனுதவித் திட்டம், கடந்த 1993-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. படித்த இளைஞர்கள் சுயமாகத் தொழில் தொடங்கி வருமானம் ஈட்ட இந்தத் திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது.

**ரூ. 5 லட்சம் வரை கடனுதவி:** ஆட்டோ, ஜெராக்ஸ் மிஷின், செங்கல் தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு தொழில் சார்ந்த பணிகளுக்காக ரூ. 5 லட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. மளிகை, ஸ்டேஷனரி வியாபாரம் செய்வதற்கு அதிகபட்சம் ரூ. 1 லட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது.

**வேலை வாய்ப்பு பதிவு அவசியம்:** இத்திட்டத்தில் கடனுதவி பெறுவோர் அவசியம் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். சுய தொழில் புரிய விரும்பும் இளைஞர்கள் அந்தந்த மாவட்டங்களிலுள்ள மாவட்டத் தொழில் மைய அலுவலகத்தை நாடினால் அவர்களுக்கு தேவையான விவரங்களை அலுவலர்கள் வழங்குவர்.

**கல்வித் தகுதி:** இத்திட்டத்தில் கடனுதவி பெற விரும்புவோர் 18 முதல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும். கல்வித் தகுதியாக 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பெண்கள், உடல் ஊனமுற்றோர், முன்னாள் ராணுவ வீரர்கள் 45-வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். மாவட்டத் தொழில் வளர்ச்சி மையத்தில் வழங்கப்படும் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அதற்கான சான்று நகல்களை இணைக்க வேண்டும்.

உரிய பரிசீலனைக்கு பின் விண்ணப்பித்த நபர்களை நேர்காணல் செய்து, தொழில் தொடங்கத் தகுதி உடையவர்களைத் தேர்வு செய்து அவர்கள் குடியிருக்கும் பகுதியிலுள்ள வங்கிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைப்பர். கடனுதவியாக கோரியுள்ள தொகையை வங்கி மேலாளர் மூலம் பெறலாம். குறைந்த வட்டியுடன் மானிய உதவியுடன் வழங்கப்படும் இந்த கடனைப் பெற்று முறையாக செலுத்தினால், தொழிலின் தன்மைக்கேற்ப தொடர்ந்து கடனுதவிகளை தொடர்புடைய வங்கிகள் பரிசீலனை செய்யும் வாய்ப்பையும் பெறமுடியும்.

அரசு வேலையையும், தனியார் துறை வேலையையும் நம்பி காலம் கடப்பதை விட சுயமாக ஒரு தொழிலை துணிவுடன் தொடங்கினால் அதில் நிச்சயம் சாதிக்க முடியும் என்பது உறுதி!.

- தொழில் நேசன்



# மெல்லிய சிந்தனை, புஷ்டியான லாபம்!

- தி இந்து (தமிழ்)

ஸ்டார்ட் அப் தொடங்குவது லேசுபட்ட காரியமல்ல. இஷ்டப்பட்டு தொடங்கி கஷ்டப்பட்டு உழைத்தாலும் பெரும் பாலானவை நஷ்டப்பட்டு நலியவே செய்கின்றன. தொன்னூறு சதவீத ஸ்டார்ட் அப்ஸ் பூட்ட கேஸ் என்கிறது ஒரு புள்ளி விவரம். நல்ல பிசினஸ் ஐடியா இருந்தும் பல ஸ்டார்ட் அப்ஸ் தோற்கின்றன என்பது தான் இதில் வேதனையான விஷயம். இத்தனை தோல்விகளுக்கு காரணம்தான் என்ன? அஷ்டமத்து சனி. ஸ்டார்ட் அப் தொடங்குபவருக்கு அல்ல; தொழிலை சரிவர அறியாத குறையால் வந்த வினை. ஐடியாவை தொழிலாக்கும் திட்டத்தில் உள்ள குழப்பம். பிசினஸை கரெக்ட்டாக வடிவமைக்காத தவறால் ஏற்படும் விபரீதம். இந்த குறைகளை நிவர்த்தி செய்யும் மந்திரம் ஒன்று உண்டு. அதற்கு பெயர் **"லீன் ஸ்டார்ட் அப் மெதடாலஜி"**. ஸ்டார்ட் அப்-ஐ எளிதாக்கும் முறை.

இதை மந்திரம் என்று சொல்வதை விட செயல்முறை என்று கூறலாம். இந்த செயல்முறை கொண்டு ஸ்டார்ட் அப் தொடங்கினால் செல்வம் உங்கள் வீட்டு கூரையை பிய்த்துக்கொண்டு கொட்டும் என்று சொல்லவில்லை. உங்களை கூரை பிய்ந்து போகாமல் செல்வம் சம்பாதிக்கும் சாத்தியக்கூறு அதிகரிக்கும் என்று வேண்டுமானால் கூறலாம். திட்டமிட செலவழிக்கும் நேரத்தை மார்க்கெட்டுக்கு சென்று பரிசோதனை செய்வதில் செலவழியுங்கள் என்கிறது லீன் ஸ்டார்ட் அப். ரூம் போட்டு ஐடியாவை யோசிக்காமல் மக்களை நேரில் சென்று பேசிப் பழகி புரிந்துகொள்ள முயலுங்கள் என்கிறது இந்த சித்தாந்தம்.




எதையும் பெரிதாய் வடிவமைத்து முடித்துவிட்டு கடைசியில் அதை சோதித்துப் பார்க்காமல் மக்களிடம் பேசிப் பார்த்து புரிந்த கொண்டு, அதற்கேற்ப கொஞ்சம் கொஞ்சமாய் ஐடரேடிவாய் பொருளை வடிவமையுங்கள் என்கிறது. ஒரு பொருளுக்கு ஐடியா கிடைத்த மாத்திரம் அதை ஸ்டார்ட் அப் ஆக்கித் தயாரித்து விற்கத்தான் பலரும் முயல்கின்றனர். அந்த ஐடியா சரியானதா, தயாரிக்க நினைக்கும் பொருள் வாடிக்கையாளருக்கு தேவைப்படுமா, அவர் தேவையை பூர்த்தி செய்ய பயன்படுமா, அதைவிட பெட்டரான பொருள் ஏற்கனவே மார்க்கெட்டில் இருக்கிறதா என்பதையெல்லாம் பார்ப்பதில்லை. அதனாலேயே தங்கள் ஐடியாவை பொருளாக்குவதிலேயே அந்த பொருளைப் பார்த்துப்பார்த்து செதுக்குவதிலேயே காலத்தைக் கடத்துகின்றனர்.

ஐடியாவை வாடிக்கையாளர்களிடம் பேசிப் பார்த்து சோதிப்பதும் இல்லை. தயாரிக்க நினைக்கும் பொருளை உத்தேசமாய் செய்து அதை வாடிக்கையாளரிடம் தந்து உபயோகிக்கச் சொல்லி அவர்கள் கருத்தை பெறுவதும் இல்லை. ஐடியா சாஸ்வதம், தயாரிக்க நினைக்கும் பொருள் சவுகரியம், ஆரம்பிக்கப் போகும் பிசினஸ் சக்ஸஸ் என்று காரியத்தில் இறங்குகின்றனர். வாடிக்கையாளர் **நோ தேங்க்ஸ்** என்று நிராகரிக்கும் போது தொழிலுக்கு காரியம் செய்கின்றனர்!.

லீன் ஸ்டார்ட் அப் செயல்முறையின் குறிக்கோள் ரொம்பவே சிம்பிள். ஒவ்வொரு ஸ்டார்ட் அப்-ம் ஒரு சோதனை முயற்சி. ஒரு கேள்விக்கான பதிலின் தேடல். தொழில் தொடங்க மனதில் தோன்றும் ஐடியாவை பொருளாக்க முடியுமா என்பதல்ல கேள்வி. அந்த ஐடியாவை பொருளாக்க வேண்டுமா என்பதற்கான பதில். இந்தப் பொருளை தயாரித்து தொழில் துவங்கினால் அந்த தொழில் பிழைக்குமா, காலா காலத்துக்கும் தழைக்குமா என்பதற்கான விடை தேடும் விடா முயற்சி. யாரிடம் இந்த கேள்விக்கான விடை கிடைக்கும்? வேறு யார், சாட்சாத் உங்கள் வாடிக்கையாளர்கள்தான். விற்கப் போவது அவர்களிடம் எனும்போது, உங்கள் பொருளை வாங்கி உபயோகிக்கப் போவது அவர்கள்தான் எனும் போது அவர்களிடம் உங்கள் ஐடியாவை பொருளாக்கி செக் செய்வது தானே நியாயம். அதுதானே முறை.

அதற்காக லீன் ஸ்டார்ட் அப் என்பது என்னவோ வாடிக்கையாளர்களிடம் மருந்துக்கு பேசும் ஒரு தத்துவார்த்த சோதனை (Theoretical Enquiry) என்று நினைத்து விடாதீர்கள். அதையும் தாண்டி புனிதமானது! உங்கள் ஐடியாவை ஒரு மாதிரி பொருளாக்கி அப்பொருளை நீங்கள் விற்க நினைக்கும்





வாடிக்கையாளர்களிடம் தந்து பயன்படுத்தச் சொல்லி அவர்கள் கருத்தை, கஷ்டங்களை முடிந்தால் நேரிலேயே பார்த்து உணரும் பிராசஸ்தான் லீன் ஸ்டார்ட் அப் மெதடாலஜி. பொருளை மார்க்கெட்டில் மொத்தமாய் அறிமுகப்படுத்துவதற்கு முன் அப்பொருளை மேலும் நேர்படுத்தும் வழிகளை அறிந்து கொள்ளும் வழி இது.

அது மட்டுமல்ல, உங்கள் பொருளை எப்படி விற்பது, என்ன சொல்லி விற்பது, விளம்பரம் செய்வதென்றால் எந்த வார்த்தைகளை பயன்படுத்தவது முதற்கொண்டு புரிந்துகொள்ளும் அணுகுமுறை. இதையெல்லாம் கூட்டிக் கழித்து பார்த்து பொருளை தயாரித்து மார்க்கெட்டில் விற்க நினைக்கும்போது வாங்க ரெடியாய் இருக்கும் வாடிக்கையாளர்களை தயார் செய்து வைக்க முடிகிறது. பொருள் புரிந்து வாடிக்கையாளரை அறிந்தபின் வேறென்ன வேண்டும். நடுநடுவே மானே, தேனே, பொன்மானே சேர்த்துக்கொண்டால் போயிற்று!

லீன் ஸ்டார்ட் அப் செயல்முறையை 2008-ம் ஆண்டில் படைத்தார் எரிக் ரீஸ் என்னும் தொழிலதிபர். தான் தொழில் துவங்கிய அனுபவங்களிலிருந்து கற்ற பாடங்களை செயல்முறையாக கூறினார். அப்பொழுது பிரபலமாக இருந்த டொயோட்டா கம்பெனியின் தயாரிப்பு சிஸ்டத்தோடு, தான் தொழில் தொடங்கிய அனுபவங்களை ஒப்பிட்டுப் பார்த்து இரண்டுக்கும் உள்ள ஒற்றுமைகளை பிரதிபலிக்கும் விதமாக தன் செயல்முறைக்கு லீன் ஸ்டார்ட் அப் மெதடாலஜி என்று பெயரிட்டார்.

சுமார் பத்து பன்னிரண்டு வருடங்களாக உலகமெங்கும் பிரபலமாகி வரும் இந்த செயல்முறையை ஸ்டார்ட் அப்ஸ் பயன்படுத்தி பயனடைந்து வருகின்றன. இதன் முக்கிய அம்சங்களையும் செயல்படுத்தும் விதங்களையும் அடுத்த முறை அலசலாம். ஏன் கட்டுரையை இழுக்கிறாய் என்று கூறுபவர்களுக்கு... கான்செப்ட்தான் சார் லீன். கட்டுரை கொஞ்சம் ஹெவியாய் இருந்துவிட்டு போகட்டுமே!.




# Giving Aadhar number in lieu of PAN? Make sure you have linked both

If you are planning on quoting your Aadhaar number instead of your Permanent Account Number (PAN), you have to make sure you have done this one thing. Your PAN should be linked with your Aadhaar, and if this is not done, you could end up with a second PAN - which can land in you trouble with the law.


The Central Board of Direct Taxes (CBDT), issued a notification on August 30 where it stated that if someone without a PAN card quotes their Aadhaar number to make a financial transaction, then the income tax department will consider this an auto-application for PAN and it will be issued to the individual. Remember in July 2019 Budget, the government allowed quoting of Aadhaar number in lieu of PAN wherever quoting of PAN is mandatory.

However, tax experts say that there is a grey area and clarity is needed on whether a person quoting Aadhaar number in lieu of PAN will be issued a PAN because it is not linked with Aadhaar.

If indeed the tax department will issue another PAN to someone who has not linked their Aadhaar, it will be problematic. For one, as per income tax laws, it is mandatory to link your PAN with Aadhaar. Currently, the last date to link your PAN with Aadhaar is December 31, 2019. Another thing is that if someone has more than one PAN, they will be penalised by the income tax department. According to income tax laws, an individual can have only one PAN allotted against their name. Therefore, if an individual holds more than one PAN, then the assessing officer can levy a penalty (Rs. 10000) under section 272B of the income tax Act.

*- The Economic Times*




PANDIAN
PERFORMANCE CHEMICALS
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098
Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care
droplets
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
ALPHA OLEPHIN SULPHONATES
SODIUM LAURYL ETHER SULPHATES
SODIUM LAURYL SULPHATES
CETOSTEARYL ALCOHOLS
FATTY ALCOHOLS
OLEO CHEMICALS
POLYMERS
PERFORMANCE CHEMICALS &
FRAGRANCES
Godrej
Godrej Industries Limited
IFF
International Flavours & Fragrance Pvt. Ltd
Dealers in
K K Dinakaran
www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com
Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

## How to make changes in a "WILL"

*- Business News*



### Paper work of amending the will

A will is a legal declaration of the intention of a testator with respect to his property. If a person dies without making a will, he is said to have died 'intestate' and in such a case, his property is inherited by his heirs in accordance with laws of succession.

If the contents of the will need to be changed due to a change of circumstances, it can be done either by a codicil (addendum) to the existing will or by completely replacing the will. However, the following points should be kept in mind while changing a will.

### Revocation of old will

While making a new will or codicil, the testator should mention about earlier wills (with date) and that the last will stands cancelled/amended.

### Conditions of valid will

Any new will or codicil should be made by a person of a sound mind who is not under any undue influence or fraud or coercion. He should make the will in writing and sign it in the presence of at least two witnesses. The witnesses too are required to sign the will.

### Contents of the will/codicil

If a new will is being made, the testator must review his earlier bequests and if required, modify or retain the same in the new one so that there is no ambiguity between the two. In case of a codicil, necessary reference to the clause in the earlier will must be provided for easy interpretation.

### Registration

It is not mandatory to register the will, however, it is advisable to do so. If the earlier will was registered, it is necessary to register the new will/codicil.

### Destroy old copies

Old will copies should be physically destroyed to avoid confusion and legal issues.

### Points to note

1. Amendment of joint wills eg. wills of husband and wife should be made with due attention to consequences of the change with respect to both the testators.
2. A will can be changed as many times as the testator wants to. Once a fresh will is made, the previous one stands revoked.

## மருத்துவத் தகவல்

**கேள்வி:** 23 வயதான எனக்கு கூடைபந்து விளையாடும் போது முழுங்கால் மூட்டினில் அடிப்பட்டதில், ACL என்னும் மூட்டு இணைப்பு நார் அறுந்தது. அதற்காக HAMSTRING GRAFT வைத்து எனக்கு ARTHROSCOPY மூலம் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அறுவை சிகிச்சை செய்து இரண்டு வாரம் ஆகிறது. எனக்கு மாவுகட்டு போடப்பட்டுள்ளது. எப்பொழுது நான் முழங்கால் மடக்கலாம், மேலும் இயல்பான வாழக்கைக்கு எப்போது திரும்பலாம்?.

**பதில்:** பொதுவாக ARTHROSCOPY சிகிச்சையின் பிறகு மாவுகட்டு அவசியமில்லை. கூடிய விரைவில் முழங்கால் மடக்க வைக்க வேண்டும். இரண்டு வாரங்களில் 90 டிகிரிக்கு மேல் மடக்குவது அவசியம். மேலும் சரியான தொழில்நுட்பத்தில் செய்யப்பட்டால் அறுவை சிகிச்சை முடிந்து அடுத்த ஓரிரு நாட்களில் காலில் முழு உடல் எடையை செலுத்தி நடக்க இயலும். மூன்று வாரங்களில் நாள்காலியில் அமர்ந்து செய்யும் அளவிற்கு இயல்பான வாழ்க்கைக்கு செல்ல முடியும். விளையாட்டுகளில் கலந்து கொள்ள நான்கு முதல் ஆறு மாதங்கள் ஆகலாம். - [illegible] K.N. [illegible]

## இரங்கல்



திருப்பூரில் உள்ள சேம்பர் உறுப்பினரும் , ஸ்ரீ மீனாட்சி ஏஜன்ஸீஸ் உரிமையாளருமான திரு. V.R. **பிரேம் சந்த்** அவர்கள் 23.11.2019 அன்று காலமானார். அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம். அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு சேம்பர் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.



ஈரோட்டில் உள்ள சேம்பர் உறுப்பினரும் பிரபு & பிரபு ஏஜென்ஸீஸ் உரிமையாளருமான திரு. T.M. **சுரேந்திரன்** அவர்கள் 26.11.2019 அன்று காலமானார். அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம். அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு சேம்பர் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.



சேம்பர் உறுப்பினர், L.N.S. காட்டேஜ் உரிமையாளர் திரு. A.S. **கோபிலால்** அவர்கள் 06.12.2019 அன்று காலமானார். அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம். அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு சேம்பர் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.





PG India
Lilly Inskirts (100 plus colours available)
& Nighties manufacturers
50.South Masi St,Madurai-1.
(M)8072639441,0452-4963232
for online shopping visit: https://www.pgindia.in

P.R.CHANDRASEKARAN P.C.MYTHILI
"Quality" is the Best business plan

# கடன், கடவுள், சத்தியம்



மேலே உள்ள எண்ணிலிருந்து கீழே உள்ள எண்ணை கழிக்கும் போது கீழே உள்ள எண் சிறியதாக இருந்தால் பக்கத்தில் இருக்கும் எண்ணிலிருந்து கடன் வாங்கு என்று முகூர்த்தத்தில் நமக்கு கற்றுத் தந்தார்களோ அன்றிலிருந்து அக்கம்பக்கம் கடன் வாங்குவது நமக்கு சர்வ சாதாரணமாகிவிட்டது. பக்கத்திலிருந்து கடன் வாங்கத் தொடங்கி அதையே பழக்கமாக்கி படிப்படியாய் வளர்ந்து வங்கியிலிருந்து பணம் பீராயும் வரை பரந்து விரிந்திருக்கிறோம்.

வாங்குவதை விடுங்கள். கொடுப்பவர்கள் எதை நம்பி நமக்கு கடன் தருகிறார்கள்? நம்மிடம் பணம் இருக்கிறதா என்று பார்த்தா? அது இருந்து தொலைத்தால் நாம் ஏன் வங்கியில் போய் கையேந்தப் போகிறோம். இல்லை என்பதால் தானே 'பவதிபிட்சாந்தேசி' என்று வங்கியில் கடன் கேட்கிறோம்!. பல வங்கிகள் கடன் கேட்பவர்களிடம் ஏன் கடன், எவ்வளவு கடன், எப்பொழுது எப்படி திருப்பித் தர உத்தேசம் போன்றவற்றை எழுதி வாங்கிக்கொள்கின்றனர். என்னதான் கேட்டவர் தகுதியை ஆராய்ந்து எழுதியதைப் படித்து கடன் தந்தாலும் கொடுத்த கடனில் சில திரும்பி வருவதில்லை. நம் நாட்டில்தான் இந்த தலையெழுத்து என்று பார்த்தால் ஆளானப்பட்ட அமெரிக்காவில் கூட வராத கடன் பதிமூன்று சதவீதமாம்.

நம்மவர்களைப் போல கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்டால் லண்டன் சென்று செட்டிலாகிறார்களா என்பது பற்றி தகவல் இல்லை! கொடுத்த கடனை ஒழுங்காய் திருப்பித் தருவாரா இல்லை வெளிநாடு க்ஷேத்ராடனம் செல்வாரா என்று கண்டுபிடிக்க முடியுமா? முடியும் என்றால் எதைக்கொண்டு தெரிந்துகொள்வது? கடன் கேட்பவர்களிடமே பேசிப் பார்க்கலாம். ஆனால் என்ன, வாங்கும் போது வக்கனையாய் பேசுகிறார்கள். வெண்ணெயாய் உருகுகிறார்கள். கடன் வாங்கிய பின் வந்த சுவடு தெரியாமல் வழக்கொழிந்து போகிறார்கள். அவர்களிடம் என்ன கேட்டு எப்படி தெரிந்துகொள்வது? எதற்கு அநாவசியமாக பேசிக்கொண்டு, கடன் கேட்பவர்கள் தரும் விண்ணப்பத்தை படித்தால் எதேஷ்டம் என்கிறார்கள் ஓடட் நெட்ஸர், எலேயின் விமெய்ர், மைக்கேல் ஹார்ன்ஸ்டீன் என்ற பொருளாதார நிபுணர்கள்.

கடன் கேட்பவர்கள் உபயோகிக்கும் மொழி, பிரயோகிக்கும் வார்த்தைகள் மூலம் கடனை திருப்பித் தருவார்களா என்பதை ஈசியாக கண்டுபிடிக்கலாம் என்று நிரூபித்திருக்கிறார்கள். தங்கள் ஆய்வை "When Words Sweat" என்ற ஆராய்ச்சி கட்டுரையாகவும் எழுதியிருக்கிறார்கள். கடன் தரும் ஆன்லைன் சைட் ஒன்றை பிடித்து அதில் கடன் கேட்டு விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களை ஆய்வுக்கு தேர்ந்தெடுத்தனர். அவர்கள் பிரயோகித்திருந்த வார்த்தைகளை 'டெக்ஸ்ட் மைனிங்' 'மெஷின் லேர்னிங்' போன்ற டெக்னிக்குகள் கொண்டு ஆராய்ந்தனர். ஏதோ பொழுது போகாமல் பத்து பதினைந்து விண்ணப்பங்களை எடுத்துப் படித்து நடத்தப்பட்ட ஆய்வல்ல. சுமார் 1,20,000 விண்ணப்பங்களை இன்கம் டாக்ஸ் அதிகாரிகள் போல் பூதக் கண்ணாடி வைத்து தேடாத குறையாக ஆராய்ந்தனர். விண்ணப்பித்துவிட்டு கடன் பெற்றவுடன் அதை ஒழுங்கு மரியாதையாய் திருப்பிக் கொடுத்தவர்கள், அப்படி கொடுக்காமல் டிமிக்கி கொடுத்தவர்கள் உபயோகித்த வார்த்தைகளில் ஏதேனும் பேட்டர்ன் தெரிகிறதா என்று பிரித்து மேய்ந்தனர். இரு சாராரும் உபயோகித்த வார்த்தைகளில் ஏதேனும் ஒரு பேட்டர்ன் தெரிந்ததா? பேஷாக. கடனை திருப்பித் தரும் எண்ணத்தோடு கடனுக்கு விண்ணப்பித்தவர்கள் பிரயோகித்த வார்த்தைகள் ஒரு குறிப்பிட்ட வகையில் இருந்ததாம். அதற்கு நேர் எதிர் வாங்கிய கடனை திருப்பித் தர நான் என்ன கேனயனா என்ற எண்ணத்தோடு கடனுக்கு விண்ணப்பித்தவர்கள் உபயோகித்த வார்த்தைகள். இவர்கள் உபயோகித்த வார்த்தைகள் எல்லாமே சொல்லி வைத்தாற்போல் ஒரே மாதிரியான ஒரு வித பேட்டர்னோடு இருந்ததாம்.

ஆழமான ஆய்வுக்கு பின் ஒருவரின் எண்ண ஓட்டத்தையும் அவர் குணாதிசியத்தையும் அவர் பிரயோகிக்கும் வார்த்தைகள் மூலம் கண்டுபிடிக்க முடியும் என்று கடன் வாங்கியவர்கள் தலைமீது சத்தியமடித்துக் கூறுகிறார்கள். பொதுவாகவே லோன் கேட்டு விண்ணப்பிப்பவர்கள் பெரும்பாலும் உபயோகிக்கும் பத்து வார்த்தைகள் இவை; 1. கடவுள், 2. சத்தியம், 3. கடன் இல்லாத, 4. மினிமம் பேமண்ட், 5. குறைந்த வட்டி விகிதம், 6. திருப்பித் தருவேன், 7. கிராஜுவேட். 8. நன்றி. 9. வரிக்கு பிந்தைய, 10. ஆஸ்பத்திரி.


Sowndarya Traders

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

பல்லாயிரம் விண்ணப்பங்களை படித்து கடனை திருப்பித் தந்தவர்கள் தராதவர்களை ஆராய்ந்து மேலே கூறிய லிஸ்ட்டில் ஐந்து வார்த்தைகளை பிரயோகிப்பவர்கள் பெரும்பாலும் கடனை திருப்பி தருவார்கள். அவர்களை நம்பலாம் என்கின்றனர். மற்ற வார்த்தைகளை பிரயோகிப்பவர்கள் அநேகமாக லண்டனுக்கு விசா வாங்கிக்கொண்டு தான் வங்கிக்கே வருகிறார்களாம். எந்த ஐந்து வார்த்தைகளை யார் சொல்வார்கள் என்று உங்களால் யூகிக்க முடிகிறதா? அந்த வார்த்தைகளை படித்து கொஞ்சம் யோசித்துத் தான் சொல்லுங்களேன் பார்ப்போம் உங்கள் சாமர்த்தியத்தை!.

கடவுள் என்கிற வார்த்தையை கூறுபவர் தெய்வ குத்தமாகிவிடும் என்று பயந்தாவது வாங்கிய கடனைத் திருப்பித் தருவார் என்பீர்கள். திருப்பித் தருவேன் என்று கூறுபவர் சொன்ன வார்த்தையை காப்பாற்றவாவது கடனை அடைப்பார் என்று கூறுவீர்கள். சத்தியம் என்பவர் செய்த சத்தியத்தை காப்பாற்ற திருப்பித் தருவார் என்றும் நினைப்பீர்கள். ஆஸ்பத்திரி செலவுக்கு வாங்குபவர்கள் அவசரத்துக்கு வாங்குவதால் ஏமாற்றாமல் தருவார்கள் என்று நம்பிக்கை தெரிவிப்பீர்கள். நன்றி என்பவர்களை மரியாதை தெரிந்தவர்கள், நாணயஸ்தர்கள், கண்டிப்பாய் திருப்பித் தருவார்கள் என்று கூறுவீர்கள். என்ன, இப்படித் தானே நினைத்தீர்கள்? கையை கொடுங்கள். கங்ராஜுலேஷன்ஸ். நல்ல காலம் நீங்கள் வங்கியில் வேலை செய்யவில்லை. செய்திருந்தால் கன்ஃபர்ம்டாய் அந்த வங்கி திவால்தான். இந்த வார்த்தைகளை கூறி கடன் கேட்பவர்கள் பெரும்பாலும் லண்டன் பார்ட்டிகளாம். கொடுத்த கடனை திருப்பித் தருவது டவுட்தானாம். கண்டிப்பாய், சத்தியமாய், கடவுள் ஆணையாய் என்று கூறுபவர்களுக்கு கடன் தருவதற்கு முன் செல்ஃபி எடுத்துக்கொள்ளுங்கள். அவர்களை அடுத்த முறை பார்ப்பது சிரமம். கடன் விண்ணப்பத்தில் கடவுள் என்று சராசரியாக 2.2 தடவை கூறுபவர்கள் கடன் வாங்குவதே லண்டனுக்கு டிக்கெட் வாங்கத்தானாம். ஆஸ்பத்திரியில் மனைவி, மச்சான் அட்மிட் ஆயிருக்கிறார்கள் மருத்துவ செலவுக்கு அவசரமாய் பணம் வேண்டும் என்று யாராவது உங்களிடம் அழுதுகொண்டே வந்து கடன் கேட்டால் பின்னங்கால் பிடரியில் பட படுவேகமாய் ஓடுங்கள். அவர்களுக்கு கடன் தந்தால் அது ஒன்வே டிக்கெட் தான். கண்டிப்பாய் திரும்பி வராது.

மற்ற ஐந்து வார்த்தைகளை பிரயோகிப்பவர்கள் பெரும்பாலும் உள்நாட்டில் மட்டுமே இருக்கும் எண்ணமுடையவர்கள். வரிக்குப் பிந்தைய, குறைந்த வட்டி விகிதம் போன்ற வார்த்தைகளை பிரயோகிப்பவர்கள் கொஞ்சத்துக்கு கொஞ்சம் ஃபைனான்ஸ், நிதி நுட்பவாதிகளாக இருப்பார்கள். பெரும்பாலும் கடனை திருப்பித் தருவார்கள். தான் க்ராஜுவேட் என்பதை எழுதுபவர்கள். தங்களுக்கு வேறு கடன் இல்லாத நிலையை குறிப்பிட்டு விண்ணப்பிப்பவர்கள் கடனைத் திருப்பித் தரும் ஜாதியைச் சேர்ந்தவர்களாம். வாங்கிய கடனை எப்படி திருப்பித் தருவேன் என்பதை விளக்கிக் கேட்பவர்கள், ஏற்கனவே பெற்ற கடனை திருப்பித் தந்ததை விவரித்த புது கடன் கேட்பவர்களை பெரும்பாலும் நம்பலாம் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

இது போன்ற டெக்ஸ்ட் மைனிங் டெக்னிக் மூலம் கொடுத்த கடன் திருப்பி வருமா என்று தெரிந்துகொள்ள மட்டும் அல்ல, வேறு துறைகளில் கூட மனிதர்களின் ஆழ்மனதை அவர்கள் குணாதிசியங்களை அவர்கள் பயன்படுத்தும் வார்த்தைகள் கொண்டு சப்ஜாடாய் புரிந்துகொள்ள முடியும் என்கிறார்கள்.

பல இடங்களில் இப்படி புரிந்துகொள்ளவும் தொடங்கியிருக்கிறார்கள் என்பதையும் கவனத்தில் கொள்க. உதாரணத்திற்கு, கல்லூரியில் விண்ணப்பிக்கும் மாணவர்கள் பயன்படுத்தும் வார்த்தைகளை கொண்டு அவர்கள் ஒழுங்காய் படிப்பார்களா இல்லை பஸ் டே என்று ஒரு நாளை தேர்ந்தெடுத்து அன்று தாங்கள் பயணிக்கும் பஸ் மீது கூட்டமாய் ஏறி கூத்தடித்து பஸ்ஸை துவம்சம் செய்து சுக்கு நூறாக்குவார்களா என்று கண்டுபிடிக்க முடியும். வேலைக்கு மனு போடுபவர்கள் பிரயோகிக்கும் வார்த்தைகள் மூலம் அவர்கள் உண்மையானவர்களா, கடின உழைப்பாளிகளா இல்லை சேர்ந்த அடுத்த நாளே இல்லாத தாத்தாவை சாகடித்துவிட்டு இலவச மோதிரம், செயினுக்கு ஆசைப்பட்டு ஃபர்ஸ்ட் டே ஃபர்ஸ்ட் ஷோ சினிமா பார்க்கச் செல்லும் டைப்பா என்று புரிந்துகொள்ள முடியும். இப்படியே போய் மணமகள் தேவை விளம்பரத்துக்கு விண்ணப்பிப்பவர்கள் எழுதும் வார்த்தைகளை வைத்து பார்ட்டி ஒழுங்கானவரா, ஏற்கனவே நான்கைந்து திருமணம் செய்து அதையே தொழிலாய் செய்து பிழைப்பவரா என்று கூட கண்டுகொள்ளலாம்.

சும்மாவா சொன்னார்கள் பெரியவர்கள். நம் கையெழுத்து நம் தலையெழுத்தை நிர்ணயிக்கும் என்று. கடன் கேட்டார் கையெழுத்தைப் பார்த்து கலங்கினான் இலங்கை வேந்தன் என்று நவீன கம்பர் எழுதலாம். ஒன்றுமே சொல்வதற்கில்லை!. அது போகட்டும், உங்களை கேட்க வேண்டும் என்றிருந்தேன். என்று நெருங்கிய உறவுக்காரர் ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகியிருக்கிறார். கொஞ்சம் பணம் தேவை. கடனாய் தர முடியுமா. உங்களைத் தான் கடவுள் போல் நம்பியிருக்கிறேன். சத்தியமாக திருப்பித் தருவேன். ஹலோ. சார். உங்களைத்தான். ஏன் ஓடுகிறீர்கள்!.

- தி இந்து (தமிழ்)



சிறந்த டிசைன் !
குறைந்த விலையில் !
நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!
ரேவதீஸ் டெக்ஸ்
பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்
1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223

# SRE weaves magic on Modi, Xi Shawls



Shawls may be just pieces of cloth. But when a weaver, designer and a design tool provider named SRE Corporation collaborated to create magic on them, they become objects of beauty! More than that, when two PMs—Modi and Xi—flaunted them, then many wondered where they came from! Sirumugai, a small village in Coimbatore, famous for its silk saree production and silk saree bazaars, is celebrating with joy. The reason behind these villagers' joy is very simple – the bright-red shawl gifted by India's honourable Prime Minister Narendra Modi to Chinese President Xi Jinping had a portrait of the Chinese leader and was woven in the small town of Sirumugai.

The designer, M Dharmaraj and weavers—A Shanmugasundaram and E Manoj Kumar—in Sirumugai worked tirelessly for over 15 days to weave the shawl after the Department of Handlooms and Textiles placed an order with their cooperative society. M Dharmaraj, with the help of the cooperative society, purchased the handloom electronic jacquard from Coimbatore-based SRE Corporation, who is one of the leading manufacturers of electronic jacquard machines for the weaving sector. The handloom electronic jacquard, which was used for weaving the shawl, can be used in the field of handloom, power looms, rapier looms, among others.



N.S. Rajan
SRE CORPORATION

சமீபத்தில் நமது பாரதப்பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சீன அதிபர் ஷி ஜின்பிங் அவர்களின் மாமல்லபுரம் சந்திப்பின் போது இரு நாட்டுத் தலைவர்களின் உருவங்கள் பொறிக்கப்பட்ட சின்னங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டது. இதில் நமது பாரதத்தின் சார்பாக பட்டுத்துணியில் சீன அதிபர் ஷி ஜின்பிங்-க்கு அவரின் உருவப்படம் பொறிக்கப்பட்ட பட்டுச் சால்வை வழங்கப்பட்டது. சீன அதிபரின் உருவப் படம் பொறிக்கப்பட்ட அந்த சால்வையானது நமது சமூகத்தைச் சார்ந்த SRE Corporation நிறுவனத்தார் உருவாக்கிய எலக்ட்ரானிக் ஜக்கார்டினால் தயாரிக்கப்பட்டவை என்பது நமது சமூகத்திற்கு வரலாற்றுப் பெருமைக்குரிய விஷயம். இவர் நமது சேம்பர் அங்கத்தினர் என்பதிலும் பெருமை கொள்கிறோம்.

**Speaking on the proud moment, NS Rajan, Director of SRE Corporation, said, "We supplied two electronic jacquards to the designer, who weaved the shawl. We are proud to be associated with this society for the wonder work of art. Thank you for giving this opportunity to supply these jacquards. We are also thankful of our technical persons, staffs, and associates, to develop a wonderful technology, i.e., electronic jacquard, which can be used in handloom."**

V Ravikumar, President of Sri Ramalinga Sowdambgai Handloom Weaved Cooperative Society said they handed over the shawl to the Department of Handlooms and Textiles' Coimbatore office. Later, the cloth was sent to Chennai and was kept ready for the event.

**On the electronic jacquard, NS Rajan said, "We are the leading manufacturer, exporter and supplier of a range of electronic jacquard machines. Our provided machine is well manufactured under the guidance of experienced professionals using premium grade factor inputs and high-end technology. The machine is available in different technical specifications as per the varied demands of our clients. The handloom electronic jacquard machine is a semi-automatic machine, with around 240 hooks, and can produce a number of good designs."**

**Similar to the shawl with the portrait of the Chinese leader, the Sirumugai weavers have also knitted a shawl for PM Modi, which was kept on display during the Mamallapuram event.**

*- The Indian Textile Journal*



LAABH
SAMACHAR
MULTI COLOR ADVT.
Contact: 93441 97952





# சீன அதிபரின் மாமல்லபுரம் விஜயம்...!

- தொழில் நேசன்

சீன அதிபர் ஷி ஜின்பிங்கின் மாமல்லபுரம் விஜயம், பிரதமர் மோடி - அதிபர் ஷி சந்திப்பு என்று சமீபத்தில் ஒட்டுமொத்த தமிழகமே பரபரப்பாக இருந்தது. தேசிய ஊடகங்களின் கவனம் முழுவதும் மாமல்லபுரத்தில் தான் குவிந்திருந்தது.

**வரலாற்றுப் பயணத்தின் நினைவாக சீன அதிபர் ஷி ஜின்பிங்குக்கு அவரின் உருவம் பொறிக்கப்பட்ட பட்டுச் சால்வையை பிரதமர் நரேந்திர மோடி பரிசாக அளித்தார்.** நரேந்திர மோடிக்கு அவரின் உருவம் பொறிக்கப்பட்ட சீனப் பீங்கான் தட்டை ஷி ஜின்பிங் பரிசாகக் கொடுத்தார். இரு நாட்டுத் தலைவர்களின் உருவங்கள் பொறிக்கப்பட்ட சின்னங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்ட போது, இந்தியா - சீனா ஆகிய இரு தேசங்களின் மக்களும் அவர்கள் பின்னால் ஒருங்கிணைந்தது போல ஒரு மகிழ்ச்சி அனைவருக்கும் ஏற்பட்டது.

அறுபது ஆண்டுகளுக்கு முன்புவரை இந்தியாவோடு மிகவும் நட்புப் பட்டியலில் இருந்த நாடு சீனா. ஆனால், தலாய் லாமாவுக்கு அடைக்கலம் கொடுத்தது முதல் இரு நாட்டு உறவிலும் விரிசல் ஏற்பட்டது. 1962-ல் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் திடீரென போர் தொடுத்து, இந்திய எல்லையை ஆக்கிரமிப்பு செய்தது சீனா. அப்போது பிரமராக இருந்த நேரு, "நட்புடன் இருந்த சீனா நம்பிக்கை துரோகம் செய்துவிட்டது" என்று நாடாளுமன்றத்திலேயே கூறினார். அப்போது தொடங்கி சீனாவுக்கும், இந்தியாவுக்கும் இடையே எல்லைத் தகராறு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் கருத்து வேறுபாடுகளும், பனிப்போரும் தொடர்கிறது.

இப்போது கூட காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருக்கும் ஒரே நாடாக சீனா மட்டும் தான். இதையெல்லாம் ஒரு பக்கம் ஒதுக்கி வைத்து விட்டுத்தான் ஜின்பிங்கும், மோடியும் மாமல்லபுரத்தில் சந்தித்துக் கொண்டனர். இந்தச் சந்திப்பை முறைசாராச் சந்திப்பு என அழைத்துக் கொண்டார்கள். திட்டமிட்டு குறிப்பிட்ட விவகாரங்களை மட்டும் பேசாமல், பொதுவான தளத்தில் நின்று பேசியுள்ளனர்.

இதற்கு முன்பு, கடந்தாண்டு சீனாவின் வூஹானுக்கு நரேந்திர மோடி சென்று, அந்த நாட்டின் தொன்மையான சுடுமண் சிற்பங்களைப் பார்த்தவாறே ஷி ஜின்பிங்கோடு பேசிக் கொண்டிருந்தார். அதன் தொடர்ச்சியாகத்தான் பல்லவர் கால மாமல்லபுரச் சிற்பங்களை ரசித்துக் கொண்டே 2 நாட்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். இரு தலைவர்களுமே இந்தப் பேச்சு வார்த்தையின் மூலம் ஒருவரைவிட ஒருவர் பலம் பொருந்தியவர்களாகத் தங்களை நிலைநிறுத்திக் கொள்ளும் வகையில் எந்த இடத்திலும் தன் முனைப்பைக் காட்டிக் கொள்ளவில்லை. "மோடியும் நானும் நண்பர்கள்" என்று ஜின்பிங் கூறினார். இதை உறுதி செய்யும் வகையில் தான் அவர்களின் முழுமையான செயல்பாடு அமைந்தது.

மாமல்லபுரத்தின் ஐந்து ரதங்களைப் பார்வையிட்டு, இருவருக்காகவும் அமைக்கப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தவாறு பேசிக் கொண்டிருந்தனர். அப்போது, பணியாளர்கள் எல்லாம் நின்றிருந்த நிலையிலும் ஜின்பிங்குக்கு மோடியே தன் கையால் இளநீரை எடுத்துக் கொடுத்தது, கடற்கரைக் கோயிலுக்கு ஜின்பிங்குக்கு முன்னாலே வந்து மோடி காத்திருந்தது, முதல் நாள் இரவு திட்டமிட்ட நேரத்தையும் விட கூடுதலாக ஒரு மணி நேரத்துக்கும் மேலாக இருவரும் பேசிக் கொண்டது என இருவருக்கும் இடையே நட்பு ரீதியான ஒரு பிணைப்பு இருநாள் நிகழ்வுகள் முழுவதும் காணப்பட்டது. அதனால், யார் பலமிக்கவர்கள் என்கிற கேள்விக்கு இங்கு இடமே இல்லாமல் போனது.

இந்தப் பேச்சுவார்த்தையால் என்ன பயன்? இது வெற்றிப் பயணமா? என்றெல்லாம் கேள்விகள் முன்வைக்கப்படுகின்றன. இருநாட்டின் தலைவர்கள் சந்திக்குக்




LAABH
SAMACHAR
MULTI COLOR ADVT.
Contact: 93441 97952



கொள்ளும் பயணங்கள் வெற்றி, தோல்வியின் அடிப்படையில் அணுக வேண்டியவை அல்ல. இந்தப் பேச்சுவார்த்தையில் கிடைத்த அவரவர் நாட்டைச் சார்ந்த முடிவு எடுக்கும் நிலையில் இருப்பதால் அது வெற்றியை நோக்கிய பயணமாக இருக்கும், அவ்வளவே. அந்த வகையில் ஜின்பிங் - மோடியின் சந்திப்பு வெற்றியை நோக்கிய பயணமாகவே அமைந்தது. மூன்றாம் முறையாக அடுத்த ஆண்டு சீனாவுக்கு மோடி செல்ல உள்ளார். அப்போதும் இதுபோல முறைசாராப் பேச்சுவார்த்தை நடத்திப் பல விவகாரங்கள் கலந்தாய்வு செய்யப்படும்.

"மாமல்லபுரத்தில், இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக சமநிலைக்கான பேச்சுவார்த்தை நடத்த குழுக்கள் அமைக்கப்படும். பருவநிலை மாறுபாடுகள் குறித்த கருத்துப் பரிமாற்றம், பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை, எல்லைப் பிரச்சனைகள் குறித்து நடைபெற்றுவரும் பேச்சு வார்த்தைக்கு இரு தலைவர்களும் வரவேற்பு" என முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக சீனா செயல்படுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தால் இன்னும் இந்தப் பேச்சு வார்த்தை முக்கியத்துவம் பெற்றிருக்கும் என்று சிலர் கூறுகின்றனர். அப்படி பேசாமல் இருந்ததுதான் இந்தப் பேச்சுவார்த்தையில் கிடைத்த வெற்றியாகவே பார்க்க வேண்டும். காஷ்மீர் விவகாரம் எங்கள் உள்நாட்டு விவகாரம் என இந்தியா சொல்லி வருகிறது. இந்தத் தருணத்தில் ஜின்பிங் காஷ்மீர் விவகாரம் குறித்துப் பேசியிருந்தால், அது பேச்சு வார்த்தையின் திசையையே மாற்றியிருக்கும். இந்த வெற்றிகளோடு இன்னொரு வெற்றியையும் இந்தச் சந்திப்பு ஏற்படுத்திள்ளது.

இந்தியாவுக்கு 1,350 ஆண்டுகளுக்கு முன்பு வந்த சீனப் பயணி யுவான் சுவாங், "இந்திய மக்கள் விரைவாகவும், தீர்க்கமாகவும் செயல்படும் மனப்போக்குடையவர்கள். ஏய்த்துப் பிழைப்பதும், ஏமாற்றுவதும் அவர்கள் வழக்கமல்ல. கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் குணம் படைத்தவர்கள்" என்றார். இவற்றையெல்லாம் சேர்த்துத்தான் ஜின்பிங் சுருக்கமாக, "மக்களின் உண்மையான அன்பைப் புரிந்து கொள்ள முடிந்தது. இருநாட்டு உறவு மேம்பட்டு வருகிறது. இது தொடர வேண்டும்" என்றார். இந்தச் சந்திப்பின் மூலம் கிடைத்த வெற்றிகளில் எல்லாம் பெரிய வெற்றியாக இது கருதப்படுகிறது.

## தமிழ்நாடு அரசு

### அரசாணை (நிலை) எண். 762, நாள் 22.10.2019

### அரசு பொது விடுமுறை நாட்கள் அறிவிப்பு

| | | |
|---|---|---|
| 1. ஆங்கிலப் புத்தாண்டு | 01.01.2020 | புதன் |
| 2. பொங்கல் திருநாள் | 15.01.2020 | புதன் |
| 3. திருவள்ளுவர் தினம் | 16.01.2020 | வியாழன் |
| 4. உழவர் திருநாள் | 17.01.2020 | வெள்ளி |
| 5. குடியரசு தினம் | 26.01.2020 | ஞாயிறு |
| 6. தெலுங்கு வருடப்பிறப்பு | 25.03.2020 | புதன் |
| 7. வங்கிகள் க/கு முடிவு | 01.04.2020 | புதன் |
| 8. மகாவீர் ஜெயந்தி | 06.04.2020 | திங்கள் |
| 9. புனித வெள்ளி | 10.04.2020 | வெள்ளி |
| 10. தமிழ்ப்புத்தாண்டு | 14.04.2020 | செவ்வாய் |
| 11. மே தினம் | 01.05.2020 | வெள்ளி |
| 12. ரம்ஜான் | 25.05.2020 | திங்கள் |
| 13. பக்ரீத் | 01.08.2020 | சனி |
| 14. கிருஷ்ண ஜெயந்தி | 11.08.2020 | செவ்வாய் |
| 15. சுதந்திர தினம் | 15.08.2020 | சனி |
| 16. விநாயகர் சதுர்த்தி | 22.08.2020 | சனி |
| 17. மொகரம் | 30.08.2020 | ஞாயிறு |
| 18. காந்தி ஜெயந்தி | 02.10.2020 | வெள்ளி |
| 19. ஆயுத பூஜை | 25.10.2020 | ஞாயிறு |
| 20. விஜயதசமி | 26.10.2020 | திங்கள் |
| 21. மிலாதுன் நபி | 30.10.2020 | வெள்ளி |
| 22. தீபாவளி | 14.11.2020 | சனி |
| 23. கிறிஸ்துமஸ் | 25.12.2020 | வெள்ளி |


AWARDS
Raj Tv
Vasanth Tv
Vijay super
Vijay Tv
Tms Award
ROYAL ROMANTIC
No.7, Pacharisikara thoppu cross street,
Kamarajar Salai, Opp to Old Dhinamani Theatre,
Madurai-9. Tamilnadu.
Website : www.bestnumerologist.com
Youtube / Google Map / Whatsapp Link : 9842111411

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர்
ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்
"ஷர்வ ரக்சன்" MRS
BEST NUMEROLOGIST
பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வசீயம் மிகுந்த பெயர்
"எண் கணித ஜோதிட" முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும்
திருமணப் பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்
FOR APPOINTMENT
98421 11411





Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, 2nd Floor, Madurai - 625 001.
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**


நம்பிக்கைக்கும், வலிமைக்கும்
JSW COLOURON+ கூரைகள்
JSW Steel
JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக
தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்
ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.
18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.
போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63
கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.
Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in


நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்
Meerakunj
RIGID PVC PIPES, FITTINGS & TANKS
AN ISO 9001 : 2008 COMPANY
மீரா குஞ்ச் பாலிடிரேடர்
17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.
போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372
E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com


அவோ! மிளோ! ஹொரடோ!
NEW YEAR CELEBRATIONS
2020
SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI
Date : 01.01.2020 (Wednesday)
Time : 06.15 PM
Venue : Githa Natana Gopala Nayagi Mandir, Teppakulam, Madurai.
COMMUNITY BUSINESS MODEL
Create, Connect & Conquer
Chief Guest
Mr. M.K. KALADHAR BABU
MD. Pandian Printpacks Pvt. Ltd., Madurai.
Guest of Honor
Mr. K.R.M. NIRANJAN KUMAR
Founder, Niranjan Group of Companies, Calicut.
Kumaran B Jaghuva
President
K.K. Dinesh
General Secretary
T.R. Saravanan
Program Chairman
T.N. Suriyaprakash
Entertainment Chairman
Tea @ 6.00 PM
Dinner @ 8.30 PM
Dr. T.S. USHA NANDHINI NANDHALAL
Nandhini Kalalaya Students, Present
BHARATHANATYAM

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2019-2021
Printed Matter

Date of Posting : 20.12.2019 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2019 - 2021
Date of Publication 20th of Every Month

TUV INDIA
An ISO 9001:2015 Certified Company

THE CONSTRUCTIVE COMPANY
www.tcco.co.in

Design & Construction of Industrial Buildings, Mixed Use Buildings, Residential Apartments, Academic Institutions, Aircraft Hangars, Uber Luxury Villas, Special Structures.

Land Line: 0452-25 81 450
Email: info@tcco.co.in

Some of our Completed Projects



HEAD OFFICE :
No 264, LIG Colony, Opp. SUNDARAM PARK,
OFF LAKE VIEW ROAD, KK NAGAR , MADURAI - 625 020

VALE SPECIALTY ORTHO CLINIC
வேல் சிறப்பு எலும்பியல் மையம்
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement
45, கலெக்டர் ஆபீஸ் ரோடு, ஹோட்டல் ஸ்டார் ரெசிடென்சி எதிரில், அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை - 20.
Ph: 0452-4367597, 97871 91156 email : knsubra@yahoo.com | Web : www.shoulderarthroscopy.co.in

- தீராத மூட்டு வலி உள்ளவர்கள்
- தோள்பட்டை வலி உள்ளவர்கள்
- மாடிப்படி ஏறி / இறங்க சிரமப்படுபவர்கள்
- விளையாட்டு காயம் அடைந்தவர்கள்



Dr. K.N. SUBRAMANIAN MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

கைத்தறியில் ஓர் புதுமை
Electronic Jacquard



Technical Details :
- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm

Applications :
- Sarees - Bed Sheets - Furnishing - Dress Material
- Blankets - Made Ups - Shirting





SRE CORPORATION
359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 46064, 97876 76494
N.S. Rajan Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com



T.S. Saravanan